திருவள்ளுவர் ஆண்டு 2045

ஜூன் - 2015

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி : 59
பகுதி : 08

விலை ரூ.10/-

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

மதுரைத் தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு உறுப்பினர்கள்

மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A.,	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS	துணைத் தலைவர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்	உறுப்பினர்
திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. க.சி. அகமுடைநம்பி B.E.,	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L.,	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. பெ.சந்திரசேகரன்	உறுப்பினர்

செந்தமிழ்

(தோற்றம் 1903)

தொகுதி : 59

பகுதி : 08

ஜூன் : 2015

திங்கள் இதழ்

திருவள்ளுவர் ஆண்டு 2045

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

21.03.1867 - 02.12.1911

இதழ்க்கட்டணம்	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்	ரூ. 100	ரூ. 600
ஆயுள்கட்டணம்	ரூ. 1,000	ரூ. 6,000
புரவலர் கட்டணம்	ரூ. 5,000	ரூ. 10,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 10	

செயலாளர்

ச.மாரியப்ப முரளி, எம்.ஏ.,பி.எல்.,

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 1.

பதிப்பாசிரியர்

பேராசிரியர். **இரா.சதாசிவம்**

மதுரைத் தமிழ்ச்சங்கம், மதுரை - 625 001.

பொருளடக்கம்

1. எள் 4

முனைவர் ப.பாலமுருகன்

2. தமிழ் மருத்துவ அகராதி 13

க.சி.அகமுடைநம்பி

3. பதிப்பு வரலாற்றில் உ.வே.சா 21

பெ.சுயம்பு

4. பண்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம் 34

முனைவர் மா.செல்வத்தரசி

இதழ் மணம்

பேராசிரியர் பாலமுருகன் அவர்களுடைய "எள்" குறித்த சொல்லாய்ச்சி மிகச்சிறப்பாக அமைந்துள்ளது. தொல்காப்பியம் முதலாகச் சங்க இலக்கியம் முதலான அனைத்துத் தமிழ் இலக்கியங்களிலும் எள் குறித்த செய்திகளைத் தொகுத்து அளித்து விளக்கம் அளித்திருப்பது தமிழின்பம் பயப்பதாகும். எள் உற்பத்தி அதன் பயன்பாடு, உணவுப் பொருளாக அதைப் பயன்படுத்துவதால் ஏற்படும் நன்மை அனைத்தையும் கோவைப்படுத்தி படிப்பவர்களுக்கு மிக்க பயனுடைய வகையில் கட்டுரை அமைத்திருப்பது மிக்க பாராட்டுக்குரியதாகும்.

அறிஞர் க.சி. அகமுடைநம்பி அவர்கள் தமிழ் மருத்துவ அகராதி குறித்த திறனாய்வுக் கட்டுரை இடம்பெறுகிறது. சென்ற நூற்றாண்டின் தொடக்கத்தில் த.வீ.சாம்பசிவம் பிள்ளை அவர்களின் அரிய முயற்சியால் வெளிவந்த தமிழ் மருத்துவ அகராதி மறைந்து போகாமல் மீண்டும் புதிய பதிப்பு அறிஞர் மு.பொன்னவைக்கோ அவர்களின் தலைமையில் சிறப்புற வெளிவந்திருப்பது தமிழிற்குக் கிடைத்த அறிவுநூல் வரிசையில் குறிப்பிடத் தக்கதாகும். அதனைத் தமிழ் உலகம் பயன்கொள்ளும் என நம்புவோம். அந்நூல் குறித்துக் கட்டுரை செந்தமிழில் வெளிவருவது வாசகர்களுக்கு மிக்க பயன் உடையதாகும்.

தமிழறிஞர் பெ.சுயம்பு அவர்கள் உ.வே.சா. பதிப்புப் பணி குறித்து கட்டுரை வரைந்துள்ளார். உ.வே.சா. பதிப்புப் பணியில் ஈடுபட்டு உழைத்த காலச்சூழலை நம் கண்முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். உ.வே.சா.வின் வாழ்க்கை வரலாறு ஒவ்வொரு தமிழ் மாணவனும் அறியவேண்டியதாகும். அவர் எழுதிய "என் சரித்திரம்" என்னும் நூலும் பிற கட்டுரைகளும் பொன்னேபோல் போற்றிப் பாதுகாத்துக் கற்க வேண்டிய அரிய செய்திகளைத் தன்னகத்தே கொண்டதாகும். உ.வே.சா. வைப் பற்றி மீண்டும் மீண்டும் படிக்கத் தூண்டும் வகையில் பேராசிரியர் சுயம்பு அவர்களின் கட்டுரை அமைந்துள்ளது. இக்கட்டுரையைப் படிப்பவர்கள் அவருடைய வரலாற்றையும் அவர் பதிப்பித்த இலக்கியங்களையும் படிக்க வேண்டும் என்னும் உந்துதல் பெறுவர்.

முனைவர் மா.செல்வத்தரசியார், தமிழர் பண்பாடும் தமிழரை அடையாளப்படுத்துவதும் விருந்தோம்பல் என்பதை சங்க இலக்கிய வழி சிறப்புற விளக்கியுள்ளார்.

எள்

முனைவர் **ப.பாலமுருகன்**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அ.வீரையா வாண்டையார் நினைவு
திருபுட்பம் கல்லூரி (தன்னாட்சி)
பூண்டி - 613 503. தஞ்சாவூர்

எள் என்பது எண்ணெய் வித்துப் பயிர். இதனை எள்ளுச்செடி என்பர். செடியில் காய்க்கும் காய்களின் உள்ளே பல வித்துக்கள் இருக்கும். எள் தமிழ்நாட்டின் பழம்பயிர். எண்ணெய் வித்துக்களில் இதுவே முதன் முதலாகக் கண்டறியப்பட்டது. ஒன்பது வகைக்கூலங்களில் எள் தலையாயது. எள்ளைத் தமிழ் உலகம் எப்படியெல்லாம் கண்டுள்ளது. என்பதை இக்கட்டுரைக் கண் வரலாற்று அடிப்படையில் காணலாம்.

எள்பெயர்க்காரணம்:

எள் என்னும் பெயர்க்குத் தொல்காப்பியர் புணர்ச்சி விதி கூறவில்லை இருள், புள், வள், மக்கள் என்னும் சொற்களுக்குப் புணர்ச்சிவிதி கூறுபவர்.

"ளகார இறுதி ணகார இயற்றே"

என்று பொதுவிதியும் கூறுகிறார். இப்பொது விதிக்கு எடுத்துக் காட்டும் உரையாசிரியர்களும் முட்குறை, முள்கடிது, முண்ஞெரிஞ்சி எனவே காட்டினார். இவற்றில் 'எள்' இடம் பெறாமைக்குக் காரணம் யாது?

"வேற்றுமை அல்வழி எண்ணென் உணவுப்பெயர்
வேற்றுமை இயற்கை நிலையலும் உரித்தே"

எனக்கூறி 'எண்' என்பது உணவுப்பெயர் என்கிறார். எண்+கடிது, எட்+கடிது எனக் காட்டுவர் உரையாசிரியர். இதனால் எண் என்பதே அதற்குரிய பெயரென்பதும் விளங்கும். பின் எள் என்பது எப்படி வந்தது. எட்கடிது என்பதைப் பிரிக்கும்போது எள்+கடிது எனவும் பிரிக்கக்கூடும் அவ்வாறு பிரித்த நிலையிலேயே எள் என்பது நம்மிடையே வந்து சேர்ந்தது.

எண் என்பது நுணுக்கம் என்ற பெயருடையசொல் எனத் தமிழ்ப் பேரகராதி குறிக்கின்றது. அஃது ஆகுபெயராய் எள்ளைக் குறித்தது.

எண்+நெய் = எண்ணெய்

என்றே வந்தாதல் வேண்டும். எள் என்னும் சொல் நெய் என்பதோடு சேர்ந்து எண்ணெய் என்று ஆயிற்று என்பதினும் எண் என்பதே நெய் என்பதோடு சேர்ந்து எண்ணெய் என ஆயிற்று என்பதே பொருந்துவது.

எள் வகை

1. கார் எள் 2. சிவப்பு எள் 3. வெள்ளை எள் 4. காட்டு எள் 5. மயில் எள் 6. பேய் எள் 7. காட்டுமயில் எள் 8. முலை எள் 9. சிறு எள் என எள் ஒன்பது வகைப்படும்.

என் குறியீடு

எள் என்பது அளவில் சிறுமையின் குறியீடாகக் கருதப் பெற்றது. கடுகினும் எள் நுட்பமுடையது. கடுகில் பெருங் கடுகு உண்டு. எள்ளில் சிறியதே உண்டு. கடுகளவு என்பதினும் எள்ளளவு என்பது மேலும் சிறுமையைக் குறிக்கும். இம்மி, தேர்த்துகள் என்பன எள்ளினும் சிறிய பரிமாணங்கள்.

"கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்தகுறள்"

எனக் கடுகு சிற்றெல்லைக்குக் கூறப்பட்டது. கடுகில் துளை யிட்டாலும் இடலாம் எள்ளில் துளையிடல் இயலாது என்பது பற்றி எள் கூறப்படவில்லை. எள் என்பது முன்னிலையேவல்: இதழ் என்ற பொருளுடையது. சிறுமைபற்றி இவ்வேவல் பிறந்தது.

எள் - எள்ளல் - இகழ்தல், சிறியதெனக் கருதுதல்

எள்ளல் - இகழ்ச்சி (தொழிற்பெயர்)

எள்-எளிமை (பெருமையாகக் கருதாமை)

எளியோர் - சிறியோர்

திடப்பொருள்களில் மலை பெருமையின் குறியீடு. எள் சிறுமையின் குறியீடு : திரவப் (நீர்மை) பொருள்களில் துளி, துமி,

என்பன சிறுமைக்குப் பேரெல்லை. கடல் என்பது பெருமைக்குப் பேரெல்லை.

எள்-சொற்பொருள்

எள் என்பதற்கு எண்ணெய்வித்து, சிற்றளவு, இகழ்தல், ஏசுதல், அஞ்சுதல் என்பன பொருளாகும். இவ்வெண்ணெய்வித்து (Sesamum indicum) என்ற தாவரவியற் பெயருடையது.

"எள்கலின்றி (தேவா 1049.10) இகழ்தல்
எண்டிசையோரும் எள்க (சீவக 1749) – அஞ்சுதல்
ஓர் பாலகன் வந்து என் மகளை எள்கி
(திவ்வி – பெரிய – 3, 7, 4)
பழிவந்து மூடுமென்று எள்குதும் (திருக்கோவையார், 92)
செங்களம் பற்றி நின்று எள்கு
(திவ்வி, இயற், 77) வருந்துதல்

என எண்ணெய் வித்து ஒழிந்த பொருள்களைக் குறிக்கக் காணலாம்.

சங்க இலக்கியத்தில் எள்

சங்க இலக்கியத்தில் எள் எனும் சொல் பத்து இடங்களில் பயின்று வந்துள்ளது.

கௌவை அஞ்சிற் காம மெய்க்கும்
எள்ளற விடினே உள்ளது நாணே (குறுந்தொகை 112 : 2)

இதன் பொருள் : பிறர் கூறும் பழிமொழியை அஞ்சினால், காமம் மெலிவடையும் பிறர் இழிக்காதவாறு காமத்தை விட்டு விடின் என்பால் நாணமே நிற்கும். இங்கு எள் என்பது எள்ளுதற் பொருளில் வந்தது.

பழமழை பொழிந்தெனப் பதனழிந் துருகிய
சிதட்டுக்காய் எண்ணின் சில் பெயல் கடைநாள்
(குறுந்தொகை 261 : 12)

இதன்பொருள் : "பழைய மழை பொழிந்ததால் பதனழிந்து உள்ளீடு அற்ற எள்ளின் காயை உடைய கார்ப்பருவ மழை இறுதிநாள்" என்பது. இங்கு எள்ளைப் பற்றி மூன்று செய்திகள்

அறியப்படும். அவை,

1. எள்ளின் பழம் பெயர் எண் என்பது

2. எள் கார்ப் பருவப் பயிர்

3. மழை மிகுதியாயின் எள்ளுக்காய் உள்ளீடு அற்றதாகும்.

எள் என்னும் நிலைத்திணை

நிலைத்திணை என்பதைத் தாவரம் என்பர். எள் தமிழக நன்செய்ப் பயிராகவும் கொல்லைப் புயிராகவும் அமைவது. எள்ளுச்செடி ஐந்திணைக்கும் உரிய கருப்பொருளாயினும் மருதம் குறிஞ்சி என்னும் இருநிலத்திலேயே பெருகப் பயிராகும். எள்ளுச் செடி எல்லாவித மண்ணிலும் வளரக்கூடியது. வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது.

எள்ளுச்செடி 50 முதல் 100 செ.மீ உயரம் வளரக்கூடியது. இதன் இலைகள் எதிர் அடுக்கில் அமைந்திருக்கும். தும்பை இலையை ஒத்துப் பெரிதாக இருக்கும். வெண்மையான பூக்கள் பூக்கும். இதன் பூக்கள் தன் மகரந்தச் சேர்க்கையாலும் அயல் மகரந்தச் சேர்க்கையாலும் காயாக வளரும். காய்கள் மேல் நோக்கி இருக்கும். ஒரு காயில் சுமார் 100 விதைகள் இருக்கும். காய்கள் முற்றியுவுடன் அறுவடை செய்து களத்தில் காய்கள் மேல் நோக்கி இருக்கும்படி வைத்து வெயிலில் உலரவைப்பார்கள். காய்கள் நன்கு காய்ந்துமேல் முனையிலிருந்து வெடிக்கத் தொடங்கும். அச்செடிகளைத் தலை கீழாக உலர்த்தி இலேசாகத் தட்டினால் எள் களத்தில் விழத் தொடங்கும் எள் கருப்பாக மென்மையாய் இருக்கும். வெள்ளை எள்ளும் உண்டு. எள்ளைப் பயிர் செய்யும் செலவு குறைவு. முறையாகப் பயிர் செய்தால் அதிக லாபம் தரக்கூடிய பயிர்.

எள் ஒரு வெப்பமண்டலப் பயிர். இந்தியாவில் வெப்பமான பகுதிகளில் விளைகிறது. சீனா, தென்கிழக்கு ஆசியா, அமெரிக்கா, கனடா, நெதர்லேண்டு, துருக்கி, பர்மா, சூடான், மெக்சிகோ, நைஜிரியா, வெனிசுலா, உகாண்டா, எத்தியோப்பியா போன்ற நாடுகளில் எள் பயிரிடப்படுகின்றது. இந்தியாவும் சீனாவும், எள் உற்பத்தியிலும் ஏற்றுமதியிலும் முதலிடம் பெறுகின்றன. 2500

ஆண்டுகட்கு முற்படத் தமிழரால் அறியப்பட்ட இப்பயிர் தமிழகத்திலிருந்தே அயலகம் சென்றதெனலாம்.

எள்ளின் மொழிவழக்குகள்

தமிழில் எள், எள்கு என வழங்கப்பெறும் இத்தவசம், தெலுங்கில் நுவளுவு என்றும், மலையாளத்தில் கருத்தெள்ளு எனவும், சமற்கிருதத்தில் தில் எனவும் ஆங்கிலத்தில் Gingeli Sesamum என்றும் வழங்கப்பெறுகின்றது. தமிழ் மொழியில் சங்ககாலம் தொட்டே என் பற்றிய குறிப்புகள் உண்டு. எள் குறித்த வினைச்சொற்கள் பெயர்ச்சொற்கள் பழமொழிகள் மொழியில் மிகுந்து காணப்படுகின்றன. இவற்றை ஆராய்கையில் எள் பல்லாயிரம் ஆண்டு வரலாறுடையது என அறியலாம்.

எள், எள்ள, எள்ளப்படு, எள்ளல், எள்ளலன், எள்ளலான், எள்ளார், எள்ளி, எள்ளிய, எள்ளிலும், எள்ளுள், எள்ளு, எள்ளுக, எள்ளுதல் எள்நர், எள்ளுபு, எள்ளும், எள்ளுமார், எள்ளுவாய், எள்ளுற்று என்ற பல வினைச் சொற்களும்.

"நெல் இருக்க இருக்கப் பொன்னு
எள் இருக்க இருக்க மண்ணு"

"ஏழைக்கேத்த எள்ளுருண்டை
பணக்காரனுக்குக் கேத்த பருப்புருண்டை"

"இளைச்சவன் எள்ளைப்போடு
வழுத்தவன் வாழையைப்போடு"

"எள்ளும் கொள்ளும் வெடித்தாற் போல"

"எள்விழ இடமில்லாக்கூட்டம் போல்"

"இளைத்தவனுக்கு எள்ளைக் கொடு
கொழுத்தவனுக்குக் கொள்ளைக்கொடு"

"இளைத்தவன் எள்ளு விதைப்பான்
கொழுத்தவன் கொள்ளு விதைப்பான்"

"எள்ளுன்னா எண்ணெயா வருவான்"

"எள்ளுதான் எண்ணெய்க்குக் காயுது என்றால்
எலிப்புழுக்கை எதுக்குக் காயுது"

என்பன எள்ளைக் குறித்தமையும் வழக்காறுகளும் எண்ணத்தக்கன.

இலக்கியங்களில் எள் :

சங்க இலக்கியங்களில் எள் பல இடங்களில் பயிலக் காணலாம்.

வெள்ளெள் சாந்தொடு புளிப்பெய்து அட்ட (புறநா.246.1)
எள் அறவிடினே உள்ளது நாணே (குறுந்.1120
எட் பகவன்ன சிறுமைத்தே (குறள் 889)
உருவ எள் பயறுழுந்தும் ... உளவே (சீவக. 1561)
செக்குநிறைஎள் ஆட்டிப் பதமறிந்து (பெரியபு.45.11)
எள் பொரிஅவல் துவரை (திருப்பு.929)
எள்ளில் எண்ணெய் உடல் உயிர் போலக் கலந்து (தாயு.3,8)
எத்தனை கூட்டம் எள் விழற் கிடமில்லை (மனோன் 1.1.14)

எள்ளவும், எள்ளு, எள்ளுருண்டை எனும் பொருண்மைகளிலும் இலக்கியங்களிலும் பயின்று வந்துள்ளன.

எண் என்னும் சொல்லாட்சி

எண் என் உணவுப் பெயர் (தொல்.எழுத்து.306.இளம்)
எண் பிழி நெய்யோடு வெண்கிழி வேண்டது (நற்.328.8)
எண் இடமின்றி மன்னர் இம்மலை குறை கொண்டு ஈண்டி (சீவக.598)
எண்ணிறைந்த நெய் ஒத்து நின்றானை
(புறப்பொருள் வெண்பாமாலை – கடவுள் வாழ்த்து 2:2,3)
உணவு எண் சாண் பிற அல்வழி உம்மே (நன்னூல்.211)

எண்ணல் நிறைந்த நெய்போல்

(ஆனந்த வண்டு தூது.465)

வாழ்க்கைப் பயன்பாட்டில் எள்

எள், இலை, பூ, காய், விதை, என அனைத்தும் பயன் பாட்டிற்குரியன. உணவே மருந்தென வாழ்ந்த தமிழர் வாழ்வியலில் எள் உணவாக, உணவுப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

“புத்தி நயனக் குளிர்ச்சி பூரிப்பு மெய்ப்புளகஞ்
சத்துவங் காந்தி தனியிளமை – மெத்தவுண்டாம்
கண்ணோய் செவிநோய் கபாலவழல் காசநோய்
புண்ணோய்போம் எண்ணெய்யாற் போற்று”

(நலம் தரும் மூலிகைகள் – 45)

எள்ளினது நெய்யினால் புத்திக்குத் தெளிவு, விழிக்குக் குளிர்ச்சி, மனமகிழ்ச்சி, தேகபுஷ்டி பலம், தேஜசு, வாலிபத் தன்மை ஆகிய குணங்கள் உண்டாகும். அன்றியும் நேத்திர நோய், கபால வெப்பம், காசம், இரணம், நீங்கும், தைலங்களில் பெரும்பாலும் மூலிகையை இணைத்து எண்ணெயைச் சேர்ப்பதால், மூலிகையின் முழுப் பயனையும் தரும்.

100 கிராம் எள்ளில் 1450 மில்லிகிராம் சுண்ணாம்பு உள்ளது. மேலும், தாமிரம், மக்னீசியம், இரும்புச்சத்து, பாஸ்பரஸ், துத்த நாகம், வைட்டமின் பி, வைட்டமின் இ, ஆரோக்கியமான புரதம் நார்ப்பொருள் அமினோ அமிலங்களும் அதிகமாகக் காணப் படுகின்றன.

தமிழர்கள் எள்ளைப் பச்சையாகவும் காயவைத்தும் வறுத்தும் இடித்தும் இனிப்புடன் வேகவைத்தும் பொருள்களுடன் கலந்தும் உண்டு வந்துள்ளார்கள். எள்ளுக் கொழுக்கட்டை என்பது பிள்ளையாருக்கு உகந்ததென்பர்.

உலகில் மற்ற நாடுகளிடையே உணவில் எள் இருந்தாலும் இவ்வாறு பல்முறைகளில் உணவில் சேர்த்துக் கொள்வதில்லை. இங்கு ஒவ்வொரு பக்குவமுறையும் ஒரு மருத்துவ குணத்தைக் கொண்டிருக்கிறது. நெய் என்பதற்கு, பிழிவு, சாறு எனப்பொருள்.

எள்ளின் பிழிவு எண்ணெய் எனப்பெற்றது. எண்ணெய் வகைகளில் மிகுதியாக இதுவே அகம் புறம் என இரண்டிற்கும் உரியதாகக் கொள்ளப்படுகிறது. உடற்சூடு தணிக்கவும் காரம் குறைக்கவும் எள்ளின் நெய் பயன்படும். வசதியற்றோரும் தீபாவளி அன்று எண்ணெய்க் குளியல் தவறாது கொள்வர். கண், காது ஆகியவற்றில் எண்ணெய் இட்டுத் தூய்மை செய்து கொள்ளப்படுகிறது. சனி நீராடு என்பதற்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பது எனப் பொருள் கூறுவாரும் உளர். மகளிர் வெள்ளியன்றும் ஆடவர் சனியன்றும் எண்ணெய்க் குளியல் மேற்கொள்வது மரபு. சனிக்கோள் அகலுங்கால் எண்ணெய்க் குளியல் மேற்கொள்ள வேண்டுமென்பது சாத்திரம். மதுரையை ஆண்ட கிருட்டின தேவராயர் உடல் முழுவதும் எண்ணெய் பூசிக் குதிரையில் ஏறி நெடுந்தூரம் பயணம் செய்து வியர்வை ஒழுகப் பின் நீராடுவது வழக்கம் என்பது வரலாறு.

எள்ளும் தமிழர் பண்பாடும்

திருமணத்தில் நெல்லும் மலரும் தூவி வழிபடும் தமிழர். இறப்புச் சடங்கில் எள்ளை நீரில் இறைப்பர் இச்சடங்கின் பொருள் உணரத்தக்கது. எள்ளும் நீரும் தெளித்துக் கடன் செய்ய வேண்டும் என்று கும்பகர்ணன் வீடணனிடம் கூறுகிறான்.

> **"ஐய! நீ அயோத்தி வேந்தற்கு அடைக்கலம் ஆகி ஆங்கே**
> **உய்கிலை என்னின் மற்று இவ் அரக்கராய் உள்ளோர் எல்லாம்**
> **எய் கணை மாரியாலே இறந்து பாழ் படுதும்; பட்டால்**
> **கையினால் எள் நீர் நல்கிக், கடன் கழிப்பாரைக் காட்டாய்"**
>
> **(கும்பகர்ணன் வதைப் படலம் – 7408)**

எள் எல்லாச் சத்தும் நிறைந்தது. வயிற்றுப் பசியை அடக்க வல்லது. உடற்சூட்டைத் தணிக்க வல்லது ஆகவே தவசமாக இதனைக் கொண்டனர். வேள்வி ஓமத்துள் எள்ளையிட்டும் எண்ணெய்யால் நல்ல விளக்கு ஏற்றலும் பார்ப்பார் மரபாகும்.

சமண முனிவர்கள் எண்ணெய்யால் விளக்கு ஏற்றி ஆழ்ந்த தியானத்தில் ஆழ்வர். மகாவீரர் என்னும் 24ம் தீர்த்தங்கரர் நிர்வாணம் உற்ற நாளில் சமணர் எண்ணெய் விளக்கு ஏற்றி இரவு முழுவதும் அவர் குறித்துச் சிந்தித்து நினைவேந்தலாக இருந்த நாளே தீபாவளி என்றும் அதனைப் பின்னர் இந்து சமயம் ஏற்றது என்றும் அறிஞர் மயிலை சீனி.வேங்கடசாமி உரைப்பார்.

இரண்டாம் சரபோசி மன்னர் காலத்தில் தஞ்சையில் மல் அரங்கில் மற்போர் நிகழ்வது வழக்கம். அப்பொழுது வேற்றூரிலிருந்து ஒரு மல்லன் தஞ்சை மல்லர்களை வீழ்த்தி ஆராவாரித்தான் அப்பொழுது கூட்டத்தினரிடையே ஒருவர் தலையில் ஒரு நெல் மூட்டையுடன் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார். அவர் பெயர் மாங்குடி கைலாசம். அவரை அழைத்து அரசன் இம் மல்லரோடு போரிட முடியுமா எனக் கேட்க அவரும் இசைந்ததாகவும் அவர் இரணடு கிடுக்கிப்பிடிகளால் அம் மல்லனை செயலிழக்கச் செய்து தஞ்சையின் மானம் காத்தார். அன்று முதல் சரபோஜி மன்னர் மாங்குடியை வரியிலிச் சிற்றூராகக் கைலாசத்துக்கு அளித்தார். பின்னர் கைலாசம் அத்தகைய வலிமை பெற்ற நிலை குறித்துக் கேட்ட போது அவர் நாள்தோறும் காலை யில் பழஞ்சோற்றில் கையால் எள்ளைப் பிழிந்து உண்டமையே தன் வலிமைக்குக் காரணம் என்றாராம். இந்நிகழ்வை உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள் தன்னுடைய நினைவு மஞ்சரி நூலில் குறித்துள்ளார்கள்.

இதையும் கருத்தில் கொண்டால் எள் சிறிது என்று எள்ளல் அறமன்று; அதன் பயன் பெரிது.

போற்றுதலுக்கும் பாராட்டுதலுக்கும் உரிய நூல்

தமிழ் மருத்துவ அகராதி

க.சி.அகமுடைநம்பி

திரு.இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம் (SRM University) செம்மொழியாம் தமிழின் தொன்மை, தன்னிகரற்ற சீர்மை ஆகியவற்றைப் பாதுகாத்தல், பரவலாக அறியப்படுத்துதல் ஆகிய பெருநோக்குடன் அமைத்துள்ள தமிழ்ப் பேராயம், அறிஞர் த.வீ.சாம்பசிவம் பிள்ளை அவர்களின் கடும் உழைப்பினால் முதல் பதிப்பாக 1938-ல் வெளிவந்த "Tamil - English Dictionary of Medicine, Chemistry, Botany and Allied Sciences" என்ற நூலை, "மருத்துவகராதி, தமிழ் - தமிழ் - ஆங்கிலம், தொகுதி 1 - மருத்துவம் - வேதியல் - புதலியல் (தாவரவியல்) சார்ந்த அறிவியல் கள் (இந்திய மருத்துவ அறிவியல் அடிப்படையிலானது)" என்ற தலைப்பில் 76 ஆண்டுகளுக்குப் பிறகு மறு பதிப்பாக 2014-ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளது. எ-4 அளவுத் தாளில் மொத்தம் 1040 பக்கங்கள் கொண்டுள்ள இந்த நூல் பார்க்கும்போதே திகைப்பை உண்டாக்குவதாக உள்ளது. செயற்கரிய செயல்களில் ஒன்றாக இதனைத் தமிழ் கூறு நல்லுலகம் ஏற்கும் என்பது ஒருதலை.

தமிழ் பெருமளவு சமற்கிருதமயமாகியிருந்த இறுதிக் காலக் கட்டத்தில் எழுதப்பட்ட நூல் இது என்பதால், இந்நூலின் பெருமளவு கலைச் சொற்களும் அவற்றுக்கான விளக்கங்களும் சமற்கிருதச் சொற்களாகவே உள்ளன. இந்தப் பதிப்பில் கலைச் சொற்களை மாற்றாமல் அவற்றுக்குத் தரப்பட்டுள்ள விளக்கங் களில் இடம் பெற்றுள்ள பிற மொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்கள் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. இதற்காக முதுமுனைவர் இரா.இளங்குமரனாரின் துணை பெறப்பட்டது. மேலும் சொல்லாய்வறிஞர் அருளி அவர்களின் 'அருங்கலைச் சொல் அகரமுதலி', 'இவை தமிழல்ல என்னும் அயற்சொல் அகராதித் தொகுதிகள்', புலவர் இறைக்குருவனார் அவர்களின் 'வாழ்வியற் சொல் அகரமுதலி' முதலான நூல்களையும்

பயன்படுத்தியதாக இந்நூலின் பதிப்பாசிரியராகிய முனைவர் மு.பொன்னவைக்கோ (தலைவர், தமிழ்ப் பேராயம்) அவர்கள் தெரிவிக்கிறார். காலத்துக்கேற்ப, முடிந்தளவு தமிழ்ச் சொற்கள் இப்பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன என்கிறார்.

நூலாசிரியர், அறிஞர் த.வி.சாம்பசிவனார் அவர்களின் முன்னுரை மட்டும் 84 பக்கங்கள் ஆங்கிலத்தில் உள்ளது. இந்த நீண்ட முன்னுரையில் சித்தர்களைப் பற்றியும் அவர்தம் சித்திகளைப் பற்றியும் பலபல செய்திகள் உள்ளன. அவற்றில் சிலவற்றையேனும் இங்குக் குறிப்பிடுவது சாலப் பொருத்தமாகும்.

அகத்தியரே தமிழுக்கு மூலவர். அவர் உருவாக்கிய இலக்கணம் தான் தமிழுக்கு முதல் இலக்கணம். கிட்டத்தட்ட இந்திய மொழிகள் அனைத்தும் சமற்கிருது மொழியால் வளம் பெற்றன. தமிழின் பெரும்பாலான சொற்கள் சமற்கிருதத்திலிருந்து பெறப்பட்டவை என்றெல்லாம் நூலாசிரியர் கூறியிருப்பது அவருடைய வாழ்நாட்களில் சமற்கிருதமயமாக்கல் வலிமை குறையாமல் இருந்தது என்பதையே காண்பிக்கிறது. பதினெண் கீழ்க்கணக்கு சமணர்களால் எழுதப் பட்டவை என்று இவர் கூறுவது ஏற்புடையதில்லை. திருக்குறளை எழுதியவர் சமணரோ அல்லது வேறு எந்தச் சமயத்தையும் சார்ந்தவரோ அல்லர். திருவள்ளுவர் ஒரு மெய்ப்பொருளறிஞர். அவரை எந்தச் சமயக் கூட்டுக்குள்ளும் அடைக்க முயல்வது அவரைச் சிறுமைப்படுத்துவதாகும்.

சமற்கிருத ஆளுமைக்கு உட்பட்டிருந்த நூலாசிரியர், கால்டுவெல் கூறியவற்றையும் இந்தியா முழுதும் தமிழே பேச்சு மொழியாக இருந்தது. சமற்கிருதம் பின் தங்கியிருந்தது. குறிப்பாக, தொலைநோக்குச் சிந்தனைகளைத் தூண்டுகின்ற அறக்கோட்பாடுகளில் தமிழ் மிக உயர்ந்து விளங்கியது என்று கால்டுவெல் கூறியவற்றைப் பதிவு செய்திருக்கிறார்.

இந்திய மருத்துவ முறைகளை நூலாசிரியர் விரிவாக விளக்குகிறார். இந்திய மருத்துவம் சமயத்தையும் மெய்யியலையும் (தத்துவம்) சார்ந்ததாகவே இருந்தது. ஒருவருடைய கண்களைப் பார்த்தே அவரிடமுள்ள நோய்களை அறிந்து குணப்படுத்தும் திறன் அம்மருத்துவத்திற்கு இருந்தது.

சித்தர்கள் தம்மை ரிசிகள், சீர்திருத்தவாதிகள், குருக்கள் அல்லது பேர்பெற்ற ஆசிரியர்கள் என்றெல்லாம் அழைத்துக் கொண்டார்கள். இராமதேவர் அல்லது யாக்கப், இராமரிசி ஆகிய சித்தர்கள் துருக்கி, அரேபியா, திபெத், சீனா, இலங்கை போன்ற நாடுகளுக்குச் சென்று, அந்தந்த நாட்டு மக்களுக்குச் சித்த மருந்துகள் பற்றியும் செப்பிடு வித்தைகள் (Magic) பற்றியும் கற்பித்தனர். போகர், புலிப்பானி ஆகியோர் சீனாவிலிருந்து 1600 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்து, தமிழ் மருத்துவம் இரசவாதம் போன்றவற்றைக் கற்றுக் கொண்டனர். போகர் அரேபியா, பெர்சியா, துருக்கி என்று பல நாடுகளுக்குச் சென்று அங்கிருந்த மக்களுக்குச் சித்த மருத்துவத்தைக் கற்றுக் கொடுத்ததுடன் பல நோய்களையும் குணப்படுத்தினார்.

பல சித்தர்கள் கிராமம் கிராமமாகச் சென்று, மக்களின் நோய்களைக் குணப்படுத்தினர். அவர்கள் வட்டார வழக்கு மொழி யில் பேசிப் பணிபுரிந்ததால், கிராம மக்கள் தமிழ் மருந்துகளையும் மருத்துவத்தையும் கற்றுக் கொண்டனர். அதன் விளைவாகவே இப்போதும் 'பாட்டி வைத்தியம்' கிராமங்களில் இருந்து வருவதைக் காண்கிறோம்.

சித்தர்கள் தமிழ் மருத்துவத்தை அக்காலத்தில் செய்யுள் களிலேயே பதிவு செய்தார்கள். தமிழ் மருத்துவம் வானியல், சோதிடம், வேதியல், இரசவாதம், மெய்யியல் முதலியவற்றைக் கொண்டது. அவையாவும் இந்த அகராதியில் முழுமையாகத் தொகுக்கப்பட்டுள்ளன என்றும், எந்தவொரு சொல்லுக்கும் வேறோர் அகராதியைத் தேட வேண்டிய தேவை இல்லை என்றும் தெரிவிக்கிறார் நூலாசிரியர்.

மனிதன் இயற்கையின் ஓர் அங்கம். ஒவ்வொரு மனிதனும் உலகளாவியவனே. தனி மனிதன் ஒருவனுக்கு ஏற்படும் நோய் இயற்கையுடன் அவன் முரண்பட்டதன் விளைவேயாகும். இயற்கை இணைந்தது. மிருகங்கள் இயற்கையுடன் இயைந்து வாழ்கின்றன. அதனால் அவற்றுக்குப் பெரும்பாலும் நோய்கள் வருவதில்லை.

இயற்கை குறித்த அறிவே மெய்யறிவாகும் (Philosophy) தன்னை அறிந்தவன் உலகளாவிய இயற்கையை அறிந்தவனா

கிறான். "தன்னை அறிந்தவனே உலகை அறிவான்" என்பது பழமொழி. "ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான்" எனும் வள்ளுவத்தையும் இங்கு நினைவுகூரலாம். இயற்கை என்பது பேரண்டம் (Macrocosm) தனி மனிதன் நுண்அண்டம் (Microcosm).

எல்லா மிருகங்களிலும் மனிதன் மேம்பட்டவன். அனைத்து மிருகங்களின் மொத்தப் படைப்பும் மனிதனிடம் ஒருங்கமைந்து உள்ளது. தன்அறிவை (Self-Knowledge) மனிதன் மட்டுமே பெற முடியும். கடவுள் நிலைக்கு உயர்ந்து செல்வதற்குரிய ஆற்றல் மனிதனிடம் உள்ளது. இதனைப் பெரும்பான்மையான மனிதர்கள் அறியாமலே இருந்து கொள்கிறார்கள்.

மனித உடல் அண்டத்தை எதிரொலிக்கும் முறையில் அமைந்துள்ளது. கதிரவன் தொகுதியின் நுண்ணியம் மனித உடல் என்பது சரியான புரிதலாகும். உடம்பின் பல பகுதிகளும் படைப்பாளியின் நுண்ணறிவால் (ஞானம்) அமைவு பெற்றனவாக உள்ளன. கதிரவன் தொகுதியும் ஒவ்வொரு பகுதியும் மனிதனுள் நுண்ணிதாய் அமைவு பெற்றுள்ளது.

சித்தக் கோட்பாட்டில் 96 தத்துவங்கள் உள்ளன. அத்துடன் மனித உடல் 72000 இரத்த நாளங்களையும் 13,000 நரம்புகளையும், 10 முக்கியத் தமனிகளையும், 10 முகாமையான வாயுக்களையும் (பிராணா), இவை எல்லாமும் ஒருங்கே பின்னப்பட்டதாகக் (Net work) கொண்டுள்ளன. 3 இயற்கைக் குணங்களின் (வாதம், பித்தம், கபம் அல்லது வளி, தீ, குளிர்) ஒழுங்கமைவு தவறுவதால் 4448 நோய்கள் உண்டாக வாய்ப்பு ஏற்படுகிறது என்கிறது சித்த மருத்துவம், கீழ்க்காணும் ஈசுவரனின் 'மெய்ஞ்ஞான நாடி' குறித்த பாடல் இதனை விவரிக்கிறது.

மூலமெழு பத்தீரா யிரமாம்நாடி
முளைத்தெழுந்து வலைபோல முடிந்ததோடே
கோலமாய்ப் பதின்மூவா யிரம்நரம்பு
கோர்வையாய்ச் சூழ்ந்திருக்கும் கூட்டிற்குள்ளே
காலமாம் நாடிபத்து வாயு பத்து
கதித்ததெல்லா முக்கோர்வைப் பகையினாலே

நாலநா யிரத்து நாணூற்றோடு

நவில் நாற்பத் தெண்ணோயாய் நாட்டலாமே.

நாடி அறிவியல்

தமிழ் மருத்துவத்தில் நாடி பார்த்து உடல் நலத்தைக் கணிக்கும் அறிவியல் மிக முக்கியமானதாகும். வேத காலத்துக்கு முன்பிருந்தே இந்த அறிவியல் தமிழ் மருத்துவ முறையாக இருந்து வந்துள்ளது. தாந்திரிய இலக்கியத்தில் இது பெயர்க்கப்பட்டது. அதன் பின்னரே ஆயுர்வேதத்தில் கையாளப்பட்டது நாடி அறிவியலின் மூலம் எல்லா நோய்களும் கண்டறியப்பட்டன. இது அரேபியா, பெர்சியா, கிரேக்கம் போன்ற பல ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டது. நாடி பார்த்தல் என்ற இச்சிக்கலான அறிவியல் குறித்துச் சித்தர்கள் - அகத்தியர், திருமூலர், சிவ வாக்கியர், யூகிமுனி, தேரையர், புண்ணாகீசர், சூடாமுனி, மரக்கா முனி, புலிப்பாணி, சட்டமுனி, போகர், வரரிசி, இராமதேவர், இடைக் காடர், கொங்கணர் முதலானோர் நூல்கள் எழுதியுள்ளனர்.

மனித மனத்தை விட ஆற்றல் மிக்கது உலகில் வேறு எதுவும் இல்லை என்பது சித்தர்களின் முடிவு. "மனம் பழுத்தால் பொன் பழுக்கும்" என்பது பழமொழி. இரசவாதம் என்பது உயிர் வலிமை இல்லை என்றால் வெற்றி பெறாது. ஆகவே மாசற்ற தூய மனம் உள்ளவர்களுக்கே இரசவாதம் கைகூடும். மேலும், இரச வாதம் வெற்றி பெற வேண்டுமென்றால் ஒருவர் பிறவியிலேயே இரசவாதியாக இருத்தல் வேண்டும். அல்லது தகுந்த குருவிட மிருந்து உயிர் ஊக்கம் பெற்றிருக்கவேண்டும்.

ஓகம்

மருத்துவத்தில் மருந்து, இரசவாதம் போன்ற யோகாவும் (தமிழில் ஓகம்) முக்கியமான ஒன்றாகும். யோகா என்றால் ஒன்று சேர்தல் அல்லது ஒன்றுதல் என்பது பொருள். இதைத்தான் 'சமாதி' என்று யோகிகள் கொள்வர். உடலைப் பற்றிய எண்ணம் எதுவும் இல்லாமல் உடலுக்கு அப்பாற்பட்டவற்றில் மனத்தை இருத்துதல் என்பதே சமாதி நிலை. முற்பிறவிகளில் யோகப் பயிற்சிகளில் ஈடுபட்டவர்களே இப்பிறவியில் யோகத்தில் ஆர்வம் கொள்வர்

என்கிறார் நூலாசிரியர். தமிழில் இதைத்தான் "விட்டகுறை தொட்ட குறை" என்கின்றனர் என்கிறார்.

தாந்திரிக அறிவியல்படி யோகா நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை, 1. இராச யோகா, 2. ஹத யோகா, 3. இலய யோகா, 4. மந்திர யோகா.

பதஞ்சலி கூறியுள்ள விதிகளின்படி 'யோகா செய்தாலும் நிறைவான பலன் கிடைக்காது, கேடாகக் கூட முடியும், ஏனென்றால் படிப்படியான முன்னேற்றத்தை, விரும்பத்தக்க விளைவுகளை அது தருவதில்லை, ஆராய்ந்தறியாத, முறையற்ற தொடர்ச்சி பலருக்குக் கேடகா முடிவதும் உண்டு, சிலருக்கு எலும்புகள் மெலிந்து விடுவதுண்டு, சிலருக்கு நுரையீரல் பாதிப்புற்று, மலச் சிக்கல் போன்ற நோய்களுடன் நடக்கக்கூட முடியாத நிலை ஏற்படுவ துண்டு' என்றெல்லாம் நூலாசிரியர் கூறியிருப்பது வியப்பாக உள்ளது. ஏனெனில், உலகெங்கும் நடைபெற்று வருகின்ற யோகப் பயிற்சிகளுக்கெல்லாம் பதஞ்சலியின் அட்டாங்க யோகமே வழி காட்டியாக இருந்து வருவதைக் காண்கிறோம்.

இந்த நூலாசிரியரின் கருத்துப்படி சிவராசயோகாதான் மற்ற அனைத்து யோக முறைகளையும் [illegible] சிறந்தது. இந்த யோக முறை புறத்தைவிட அகத்தை [illegible]த்தைப் பண்படுத்துகிறது. தன்னறிவை முறையாகப் பெற்றிட உதவுகிறது.

யோகாவுடன் இணைந்துள்ளவை, தனிமை, அதிர்வு, மன ஓர்மை, உணர்வு, மனம் முதலானவை. மிகவும் பாதுகாப்பான ஒன்று *தியானம் (Meditation)*; ஆகவே ஒவ்வொருவரும் நாள்தோறும் சிறிது நேரம் தியானத்துக்கென்று ஒதுக்கலாம். அப்போது புறவுலகு முற்றிலுமாக மனத்திலிருந்து அகன்று விடும். உள்ளுணர்வில் மனம் ஆழ்ந்தாழ்ந்து செல்லும். தெய்வீகத் தன்மை தன்னைத் தானே வெளிப்படுத்த முன்வரும். இந்த நிலையில், மன அமைதி, மன வலிமை, ஆற்றல் உயிருக்குள் செல்லும். எந்த ஆற்றலும் எந்த வாய்ப்பும் தவறிப் போகாது.

இவ்வாறு நுணுக்கமான பல செய்திகள் 86 பக்க முன்னுரையில் உள்ளன. ஆனால் சொல்ல வேண்டிய பலவற்றை இந்த முன்னுரையில் கொடுக்க முடியவில்லை என்று வருந்துகிறார்

நூலாசிரியர். இந்தப் பெரிய அகராதியை உருவாக்குவதற்குத் தம் வாழ்வின் பெரும்பகுதியைச் செலவிட்டுள்ளார். தமிழர்கள் அனைவரும், சிறப்பாகத் தமிழ் மருத்துவம் அல்லது சித்த மருத்துவத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் இந்நூலாசிரியர், அறிஞர் த.வீ.சாம்பசிவனார் அவர்களைக் கைகூப்பி வணங்கி அவருக்கு நன்றி பாராட்டக் கடமைப்பட்டவர்களாவர்.

இந்த இரண்டாம் பதிப்பை உருவாக்குவதில் பதிப்பாசிரியர் கடுமையான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார் என்பதை இப்பெரும் அகராதி நூலே கட்டியம் கூறிக்கொண்டுள்ளது. முதல் பதிப்பின் உள்ளடக்க அமைப்பில் பல மாற்றங்கள் செய்யப் பட்டுள்ளன என்கிறார் பதிப்பாசிரியர்.

தலைச் சொற்களுக்கான பொருள் விளக்கங்களில், சரியாகப் புரிந்துகொள்ள உதவுகின்ற முறையில் கூட்டுச் சொற்கள், சொல் பிரித்துத் தரப்பட்டுள்ளன. தலைச் சொற்கள் மட்டும் மூல நூலில் உள்ளபடியே இதிலும் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு தலைப்புச் சொல்லுக்கு ஒரு விளக்கம் மட்டும் இருந்தால், முக்காற் புள்ளி இடப்பட்டு, அதே வரியில் விளக்கம் தொடங்கப்பட்டுள்ளது. ஒன்றுக்கு மேற்பட்ட விளக்கங்கள் இருக்கும் இடங்களில் 1, 2 ... என்று எண்ணிட்டு அடுத்த வரியில் தொடங்கப்பட்டுள்ளன.

தமிழ்ச் சொற்கள் பலவற்றுக்கும் இப்பதிப்பில், சரியான வடிவம் குறிக்கப்பட்டுள்ளன. முதல் பதிப்பில் அகர வரிசைப் படுத்துவதில் சிற்சில இடங்களில் மாறியிருந்தவை இப்பதிப்பில் சரி செய்யப்பட்டுள்ளன என்கிறார் பதிப்பாசிரியர்.

உயிரெழுத்துக்கள் தொடக்கமாக உள்ள கலைச் சொற்களை மட்டும் கொண்டதாக இந்த முதல் தொகுதி வெளி வந்துள்ளது. மற்ற தொகுதிகளும் அடுத்தடுத்து வெளிவர இருக்கின்றன என்ற நல்ல செய்தியைப் பதிப்பாசிரியர் தெரிவித் துள்ளார். பதிப்பாசிரியர் கூறியுள்ளபடி, மருத்துவத்துறையினரும், தமிழ் கூறும் நல்லுலகமும் இந்நூலினைப் பயன்கொண்டால், அது இந்நூலினை அரும்பாடுபட்டு உருவாக்கிய அறிஞர் த.வி.சாம்ப சிவனார் அவர்களுக்குச் செலுத்துகின்ற நன்றியாக அமையும். அத்துடன் திரு.இராமசாமி நினைவுப் (SRM) பல்கலைக்கழகத்தில்

தமிழ்ப்பேராயம் அமைத்திட்ட பல்கலைக்கழக வேந்தர் முனைவர் வா.தா.பச்சமுத்து அவர்களும் அதனை செம்மையாக இயக்கிக் கொண்டிருக்கும் துணைவேந்தர் முனைவர் மு.பொன்னவைக்கோ அவர்களும், அவர்களுக்குத் துணையாக தோள் கொடுத்துப் பாராட்டுகின்ற முனைவர் ம.செ.இரபிசிங், திரு.குணத்தொகையன், முனைவர் இல.சுந்தரம் ஆகியோரும் உலகத் தமிழர் அனைவரின் போற்றுதல்களுக்கும், பாராட்டுதல்களுக்கும் நன்றிக் கடப் பாட்டுக்கும் உரியவராகிறார்கள்.

தமிழ்நாட்டிலுள்ள சித்த மருத்துவக் கல்லூரிகள் இந்த மருத்துவ அகராதியைக் கல்லூரியில் ஒவ்வொரு மாணவரும் பயன்படுத்துமாறு வழிநடத்தலாம்.

இவ்வகராதிக்கேற்ப மாணவர்களுக்கு கற்பிக்கப்படும் பாடங்களை விரிவுபடுத்தலாம்.

ஆங்கில மோகத்தால் தமிழ்க்கல்வி எப்படி ஆண்டுதோறும் குறைந்து கொண்டிருக்கிறதோ, அதே போலத் தமிழ் மருத்துவம் அல்லது சித்த மருத்துவமும் ஆங்கில மருத்துவமனைகளின் அதிமிகு எண்ணிக்கையால் மக்களால் கண்டுகொள்ளப்படாமல் விடப்பட்டுள்ளன. ஆங்கில மருத்துவத்தில் அதிகச் செலவாகிறது. அல்லாமல் புற்றுநோய், எயிட்ஸ், பன்றிக் காய்ச்சல் போன்ற பெருகிவரும் புதுப்புது நோய்களுக்கெல்லாம் ஆங்கில மருத் துவத்தைவிட தமிழ் மருத்துவமே திட்டவட்டமான தீர்வை அளிக்கும் என்ற விழிப்புணர்வைத் தமிழ் இயக்கங்கள் மக்களிடம் கொண்டு செல்ல முன்வரவேண்டும். சித்த மருத்துவ மனைகள் மாவட்டத்திற்கு ஒன்று என்றேனும் நிறுவிட தமிழ்நாடு அரசு முன் வந்தால் மக்கள் நலன் அரசு என்பது உறுதிப்படும்,

"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"

என்ற வள்ளுவ வாழ்வியலை மக்கள் துய்த்திட தமிழக அரசு உறுதுணையாக இருக்க வேண்டும் என்று இறைஞ்சி வேண்டு கிறோம்.

பதிப்பு வரலாற்றில் உ.வே.சா

பெ.சுயம்பு

தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சா.

தமிழ் மொழியின் வளத்திற்கும் தொன்மைக்கும் ஆதார மான இலக்கண, இலக்கியச் செல்வங்கள் மக்களின் கண்களுக்குப் புலப்படாமல் ஆங்காங்கே ஏட்டுச் சுவடிகளிலும் புலவர்களின் மனத்திலும் ஒளிந்தும் ஒதுங்கியும் கிடந்தன. கால மூப்பினாலும் பூச்சிகளாலும் மக்கியும் சிதைந்தும் அழிந்தன; அழிவை நாடி விரைந்து கொண்டிருந்தன. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் அலைந்து, உடலும் பொருளும் இளைத்தாலும், மனம் சலிக்காது நூற்செல்வங்கள் இருந்த இடங்களையும் புலவர்களையும் தேடிக் கண்டறிந்து, கெஞ்சியும் கொஞ்சியும் கேட்டுப் பெற்று, ஏடுகளை முறைப்படுத்தி, தொகுத்து, செம்மையாக்கி, எளிமையான விளக்கங் களுடன் தாள்களில் அச்சேற்றி, உலக மாந்தர் யாவருக்கும் பொதுமையாக்கி, தமிழின்- தமிழினத்தின் பெருமையைப் பேணிக் காத்து, பறை சாற்றிய விழுச்சீர்மை கொண்ட பெருந்தகை - பேரறிவாளர் - பெரும் பேராசிரியர் - டாக்டர் உ.வே.சாமிநாதையர். அவரது அருஞ்செயல் - சாதனை வேறு யாராலும் அவருக்கு முந்தைய காலத்தும் பிந்தைய காலத்தும் செய்தற்கு அரியது. அவரால் தமிழ் மொழி புத்துயிர் எய்திற்று. தமிழ் இலக்கண, இலக்கியங்களைப் படைத்தளித்த புலவர்களாகிய தந்தையர்களின் சாதனைகள் உ.வே.சா. அவர்களால் பாதுகாக்கப்பெற்றன. இதனாலேயே அவர் தந்தைக்கெல்லாம் தந்தையாகித் தமிழ்த் தாத்தா எனப் போற்றப்படுகிறார். எட்டுத்தொகை, பத்துப்பாட்டு எனும் செவ்விலக்கியங்களுள் பெரும்பான்மையவற்றை விளக்கமெழுதி, அச்சேற்றிக் காத்தவர். இவற்றால் தொன்மையும் செழுமையும் விழுமியமும் கொண்ட உலகச் செம்மொழிகளின் பட்டியலில் தமிழ்மொழி இடம்பெறுதற்குப் பெரிதும் காரண மானவர். இன்னோரன்ன அருஞ்செயல்களைச் செய்தமையால் மகாகவி பாரதி,

பொதியமலைப் பிறந்தமொழி வாழ்வறியும்
காலமெல்லாம் புலவோர் வாயில்
துதியறிவாய் அவர்நெஞ்சின் வாழ்த்தறிவாய்
இறப்பின்றித் துலங்கு வாயே

என்று பாமாலை சூட்டினார்.

டாக்டர் உ.வே.சா.வின் நோக்கம்

டாக்டர் உ.வே.சா.வின் தலைமாணாக்கர் வாகீச கலாநிதி - சிலேடைச் செல்வர் கி.வா.ஜகந்நாதன். தமது கலைமகள் இதழில் உ.வே.சா.வின் நோக்கம் குறித்து எழுதுமாறு வேண்டினார். அருமை மாணாக்கரின் வேண்டுதலை ஏற்றுக் கட்டுரையும் எழுதினார். "என்னுடைய வாழ்வின் நோக்கமெல்லாம் பெரும்பாலும் தமிழின் தொடர்புடையதுதான். தமிழ் நூல்களை ஆழ்ந்து பயில வேண்டும். பலமுறை பயின்றால்தான் உண்மை புலப்படும். ஒரு நூலிலுள்ள சொற்சுவை, பொருட் சுவைகளை அனுபவித்துப் படிக்க வேண்டும். அவற்றைப் பிறரும் அறியும் வண்ணம் எளிய நடையில் எழுதவும் சொல்லவும் வேண்டும்" *என்பது அக் கட்டுரையின் ஒரு பகுதி.*

டாக்டர் உ.வே.சா. கலைமகளில் தெரிவித்ததைப் போன்ற செய்தியைத் தமது என் சரித்தரித்திலும் வெளிப்படுத்தியுள்ளார். "ஏட்டுச் சுவடிகளில் கண்ட பாடங்களின் வேறுபாட்டைக் கண்டு கண்டு என் மனம் புண்ணாகியிருந்தது. இன்னபடி இருந்தால் பொருள் சிறக்குமென்று எனக்குத் தோற்றின இடங்களிலும் பிரதியில் உள்ளதையே பதிப்பித்தேன் என்னுடைய கருத்தையோ திருத்தத்தையோ சிந்தாமணியில் ஏற்றாமல் மிகவும் ஜாக்கிரதை யாகக் கவனித்துப் பதிப்பித்தேன். பதிப்பிக்கத் தொடங்கிய நூல் எனக்கு ஒரு தெய்வ விக்கிரகம் போல் இருந்தது. அதன் அழுக்கைத் துலக்கிக் கவசமிட்டுத் தரிசிக்க வேண்டுமென்பதே என் ஆசை. தமிழ் நூல்களும் உரைகளும் பண்டை வடிவம் குன்றாதிருத்தல் வேண்டுமென்பதே எனது நோக்கமாதலின் பிரதியில் இல்லாதவற்றைக் கூட்டியும், உள்ளவற்றை மாற்றியும், குறைத்தும் மனம் போனவாறே அஞ்சாது பதிப்பித்தேனல்லேன்" (என் சரித்திரம், பக்கம் 611-612).

டாக்டர் உ.வே.சாவின் தமிழ்ப்பற்றும் சீரிய நோக்கமும் அழிந்து ஒழிய இருந்த நூற்செல்வங்களைத் தேடித் தொகுத்திட அவரைத் தூண்டின; தாம் பெற்ற இன்பத்தை வையகமாந்தர் யாவரும் பெற்றுய்ய வேண்டும் என்று இயற்சொற்களால் ஆன எளிய நடையில் விளக்கவுரை, குறிப்புரை, அருஞ்சொல்லகராதி, ஆராய்ச்சி, முன்னுரை, பாடவேறுபாடுகள் போன்ற பகுதிகளுடன் பழந்தமிழ்ப் பனுவல்களையும் உரைகளையும் பதிப்பித்திடக் காரணமாயின. குறிக்கோளை ஒட்டியே ஒரு செயலின் பயன் அமையும். உ.வே.சா. அவர்களின் தற்சார்பற்ற சீரிய குறிக்கோள் தமிழன்னை செவ்விய பதிப்பு மிகு நூற்செல்வங்கள் பலவற்றை உருவாக்கியது.

சுவடிகளின் அமைப்பில் சிக்கல்கள்

டாக்டர் உ.வே.சா. பதிப்புப் பணியின்போது பல்வேறு இன்னல்களும் இடையூறுகளும் நிறைந்த சிக்கல்களை எதிர் கொள்ள நேரிட்டது. அவர் தொகுத்திருந்த ஏட்டுச் சுவடிகளுள் பல ஏடுகள் பாடல் எண்வரிசை மாறிக் கட்டப்பட்டிருந்தன. ஏடுகள் பல செல்லரித்துச் சிதைவுற்றிருந்தன. எனவே எழுத்துக்களையும் கருத்துக்களையும் முழுமையாக இனம் காணுதல் எளிதாகக் கூடவில்லை. ஒரு நூலுக்கு வெவ்வேறு பாட வேறுபாடுகள் கொண்ட பல சுவடி அல்லது தாள் பிரதிகள் கிடைக்கப்பெற்றன. பழஞ் சுவடிகளைப் படி எடுத்து எழுதியோரின் பிழைகள் பல வடிவில் காணப்பட்டன. தம் செவியில் கேட்ட அளவில் புரிந்து கொள்ளப்பட்டு எழுதப்பெற்ற செய்திகளும் இருந்தன. படி எடுத்து எழுதியோரின் கொள்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப, மூல பாடத்தைக் குறைத்தோ கூட்டியோ சிதைக்கப்பட்ட செய்திகளும் இடம் பெற்றிருந்தன. இவை போன்ற சிக்கல்கள் யாவும் உ.வே.சா. வுக்குத் தடைக்கற்களாகத் தோன்றினும், அவர் உள்ளச் சோர் வின்றி, தடைகளை உடைத்து, தம் பணியை முழுமையாக்குதலில் உறுதிகொண்டார். பெரும் முயற்சியினால் சிக்கல்களைச் சீராக்கிய போது, அவரது ஆர்வம் வேகமும் வலிவும் கொண்டது.

தமிழ் எழுத்துச் சிக்கல்கள்

ஏட்டுச் சுவடிகளில் எழுத்தாணியால் எழுதுவோர் மிகவும் கவனமாக எழுத வேண்டும். இன்றேல் ஓலை கிழிந்திட நேரிடும். எழுத்தாணியை ஆழமாகப் பதித்து எழுதுதல் தகாது. பட்டும் படாமலும் எழுதினால் எழுத்துப் பதியாது. எனவே மிகக் கவனமாக ஆர்வத்துடனும் பொறுமையுடனும் எழுத்துப் பணியை மேற்கொள்ளுதல் வேண்டும். தமிழ் எழுத்துக்களின் அமைப்பும் சிக்கலானதே. அகர உயிர்மெய்களிலிருந்து மெய்களைப் பிரித்துக் காட்டுதற்கு மேலே புள்ளியிட வேண்டும். ரகரமும் ஆகார நெடிலுக்கான காலும் அவ்வாறே. காலிலிருந்து அகரம் சேர்ந்த ரகர உயிர் மெய்யைப் பிரித்துக்காட்டிடக் கீழே சாய்கோடு இழுத்தாக வேண்டும். ஆனால் இத்தகைய எழுது முறைகளைக் கையாளுதல் ஓலை ஏடுகளில் கடினமாகும். எழுத்தாணியின் கூர் நுனியால் ஓலை சிதைந்துவிடும். எனவே முன்னர்த் தாம் பெற்றுள்ள அனுபவத்தின் அடிப்படையிலேயே ஏடுகளை எழுதுதலும் படித்தலும் சிறப்புப் பெறும்.

"இது கொம்பு, இது சுழி என்று வேறு பிரித்து அறிய முடியாது. மெய்யெழுத்துக்களுக்குப் புள்ளி இராது. ரகரத்துக்கும் காலுக்கும் வேற்றுமை தெரியாது. சரபம் சாபமாகத் தோற்றும். சாபம் சரபமாகத் தோற்றும். குருதி என்பதைக் குந்தியென்றெண்ணித் தடுமாறினேன்," (என் சரித்திரம், பக்.559-560).

டாக்டர் உ.வே.சா. அவர்கள் தமிழ் எழுத்துக்களின் அமைப்பினால் தாம் அனுபவித்த சிக்கல்களை இவ்வாறு பதிவு செய்துள்ளார்.

தமிழில் காலத்தொன்மை, பல்வேறு வட்டார இனக் கிளை மொழிகள் காரணமாக ஒரு பொருளுக்குப் பல சொற்கள் வழங்கப்படுகின்றன. அவற்றுள் ஒலிமாற்றம் காரணமாக எழுத்துத் திரிந்து வெவ்வேறான மாற்றுச் சொற்களும் அடக்கம். இத்தகைய சொற்கள் இலக்கியத்தில் இடம்பெற்ற நிலையில் டாக்டர் உ.வே.சா. தம் மனம் பற்றிய அளவில் கொள்ளுதல் இன்றி, காலத்தால் முந்தைய இலக்கிய வழக்கை ஏற்று, சொல்லைத்

தெரிவு செய்துள்ளார். குமரகுருபர சுவாமிகள் இயற்றிய சிற்றிலக்கியங்களைத் தொகுத்துக் குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு எனும் பெயரில் பதிப்பித்தார். அத்திரட்டின் குறிப்புரைகளில், ஆங்காங்கே சொல்லின் உண்மை வடிவத்தைக் கண்டறிகிற ஆராய்ச்சியினையும் காணமுடிகிறது. ஆட்டுக்கிடாய், ஆட்டுக்கடா என்று இருவேறு வழக்குகள் இலக்கியங்களிலும் பேச்சு வழக்குகளிலும் காணப்படுகின்றன. இவ்வாறு வெவ்வேறு வடிவங்கள் ஒரு சொல்லுக்குக் காணப்படுகிற சூழலில், பழைய நூல்களில் இடம்பெற்றுள்ள வடிவமே உண்மையானது என்று உறுதி செய்கிற கொள்கையை உ.வே.சா. மேற்கொள்கிறார். கந்தர் கலி வெண்பாவில் இத்தகைய இடப்பாடு நேர்ந்தபோது, 'நிலைக் கோட்டு வெள்ளைநால் செவிக்கிடாய்' எனும் அகநானூற்றுப் பாடலை மேற்கோள் காட்டிக் கிடாய் கடா எனும் சொற்களுள் கிடாய் என்பதே உண்மையான சொல் என்று முடிவு செய்கிறார்.

சமயம் தந்த சிக்கல்கள்

உ.வே.சா. அவர்கள் திருவாவடுதுறை முதலிய சைவத் திருமடங்களோடு நெருக்கமான உறவு உடையவர். அத்திரு மடங்களின் தலைவர்கள் உ.வே.சா.வின் புலமையால் பெரிதும் ஈர்க்கப் பெற்றிருந்தனர். எனவே தமிழ்ச்சுவடிகள் பலவற்றை வழங்கி, பொருளுதவியும் செய்தனர்.

சைவம், வைணவம் எனும் இந்து சமயப் பிரிவுகளின் புனித நூல்கள், சித்தாந்தங்கள், சடங்கு முறைகள் போன்றவற்றில் ஐயரவர்களுக்குப் பயிற்சி இருந்தது. ஆனால் சமணம், பௌத்தம் ஆகிய சமயங்கள் தொடர்பானவை அவருக்குப் புதியவை.

சீவக சிந்தாமணியும் மணிமேகலையும் சமணம், பௌத்த சமயம் தொடர்பானவை. இவ்விரு நூல்களையும் பதிப்பிக்கும் போது ஐயரவர்கள் வெவ்வேறு வகைச் சிக்கல்களை அனுபவித்தார். ஒரு நூலைப் பதிப்பிக்கும்போது அந்த நூலை இயற்றிய நூலாசிரியனின் உள்ளக் கருத்தைப் பேரளவில் வெளிப்படுத்துவதே பதிப்பாசிரியரின் நோக்கமாக இருத்தல் வேண்டும். மாறாக, பதிப்பாசிரியர் தமது மனம் போன போக்கில் எவ்விதத் தேடுதல்

முயற்சியுமின்றிப் பதிப்புப் பணியில் ஈடுபடுதல் தகாது. எனவே ஐயரவர்கள் நூல்களைப் பதிப்பிக்கும்போது, அந்நூல்கள் தொடர்பாகக் கிடைக்கிற சுவடிக் கட்டுக்குள், அவை பற்றி அறிந்த புலவர்கள் ஆகியோரைத் தேடி அலைதற்காகச் சலித்துக் கொள்ள வில்லை. சீவகசிந்தாமணிக்குப் பத்தொன்பது ஏட்டுப் படிகளைத் தேடித் தொகுத்த செய்தி அந்நூலின் முன்னுரையில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சுவடிகள் யாவும் வெவ்வேறு ஊர் களிலிருந்து தொகுக்கப்பெற்றவை.

சமணசமயச் சான்றோர்களிடமிருந்து சிந்தாமணி ஏடுகளைப் பெற்றபோது சமயப் பகைமை உணர்வையும் சடங்குக் கட்டுப் பாடுகளையும் அவர் காணமுடிந்தது. சைவ சமயத்தோடு நெருக்க முடைய ஒருவரால் நடுநிலையில் சிறப்பாக நூலைப் பதிப்பிக்க இயலாது என்று அஞ்சியவர்களும் உண்டு. இதற்கு மாறாக, சைவ சமயத்தவர்களின் எதிர்ப்பும் ஐயரவர்களுக்கு முள்ளாகக் குத்தியது. 'உமாபதி சிவாசாரியார் 'பொய்யே கட்டி நடத்திய சிந்தாமணி' என்று சொல்லி இருக்கும் ஜைன நூலை அச்சிட்டது தவறு' என்று கண்டனப் புயலைச் சிலர் எழுப்பினர். 'ஜைன நூலை அச்சிட்டது பிழை என்றும் சைவ மடாதிபதி சகாயம் செய்தது தவறென்றும் சிந்தாமணியில் பிழைகள் மலிந்துள்ளன என்றும் அதிலுள்ள பிழைகள் கடல் மணலினும் விண்மீனிலும் பல என்றும் கண்டித்துத் துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டனர் (என் சரித்திரம், ப.645) 'சீவக சிந்தாமணிப் பிரகடன வழுப் பிரகாரணம்' என்ற நூலும் வெளியிடப்பட்டது. இந்து இதழிலும் ஐயரவர்களின் சிந்தாமணிப் பதிப்புப் பணியினைக் குற்றஞ் சாட்டிச் செய்தி வெளியாயிற்று.

டாக்டர் உ.வே.சா. சீவக சிந்தாமணி ஏடுகளைத் தேடித் தொகுத்து, விளக்கவுரைகள் போன்றவற்றைக் குறித்து அச்சேற்றும் பணியில் அவரது முயற்சியைப் பலம் இழக்கச் செய்யும் வகையில் பலரிடமிருந்தும் அறிவுரைகளும் தந்திப் பேச்சுக்களும் வந்தன. ஐயரவர்களுக்குச் சிந்தாமணியின் சுவடிப் படியைக் கொடுத்து உதவியவர்களுள் யாழ்ப்பாணம் சி.வை.தாமோதரம் பிள்ளையும் ஒருவர்; நண்பர் என மதிக்கத் தகுந்தவர்; ஏற்கனவே பழைய சுவடிகள் சிலவற்றைப் பதிப்பித்து அச்சிட்டு வெளியிட்டவர். அவர்

சிந்தாமணியைத் தாமும் பதிப்பிக்க இருப்பதாகக் கூறிக் கொண்டிருந்தார்; உ.வே.சா. அவர்களிடமும் தமது விருப்பத்தைத் தெரிவித்தார். ஏடுகளைப் பதிப்பிக்கும் பணியில் தமக்கு முன் அனுபவம் நிறைய இருப்பதாகவும் தாம் பதிப்பிப்பதே சிறந்தது என்றும் வெளிப்படையாகக் கூறினார். மேலும், டாக்டர் உ.வே.சா. கம்பராமாயணத்தைப் பதிப்பிக்கலாம்; அந்நூலைப் பதிப்பித்தால் இறைவனின் அருளும் கிடைக்கும் என்று பலவாறு எடுத்துரைத்தார். இன்னும் சிலர் வேறுவிதமாகப் பேசிச் சிந்தாமணி அச்சில் வருதலைத் தடுத்திட முயன்றனர். யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர், துரு பாதிரியார் (Rev.Drew) போன்ற தமிழறிஞர்கள் பெருமுயற்சி மேற்கொண்டும் நிறைவேற்றமுடியாத பணியைச் சாமிநாதையரால் எவ்வாறு சிறப்பாகச் செய்யமுடியும் என்றும் பேசலாயினர்.

சீவக சிந்தாமணியின் பாடமும் அதற்கான நச்சினார்க்கினியரின் உரையும் டாக்டர் உ.வே.சா.வுக்குப் பல இடங்களில் புரியாத புதிராகத் தோன்றின. 'மூவாமுதலா வுலகம் ஒரு மூன்றும் ஏத்த' எனும் கடவுள் வாழ்த்துப் பகுதியே பெருஞ்சிக்கலாகியது. இப்பகுதிக்கு உரை வரைந்த உச்சிமேற் புலவர் கொள் நச்சினார்க்கினியர், 'அந்தமும் ஆதியும் இல்லாத மூவுலகம்' என்று குறிப்பிட்டுள்ளார். சைவமும், வைணவமும் இறைவனால் படைக்கப்பட்ட ஒரு பொருள் என்று உலகினைக் கூறுகின்றன. படைக்கப்படாத பொருள் எனும் சிந்தாமணியின் கருத்து உ.வே.சா.வுக்கு முரணானதாகத் தோன்றியது.

சிந்தாமணியின் பாடல்களுக்கு எழுதப்பெற்ற உரைச் செய்திகளும் மயக்கத்தைத் தந்தன. 'திருத்தங்கு மார்பன் புனலாட்டிலே உயிர் போகின்ற ஞமலிக்குத் தானும் வருந்திப் பஞ்சாட்சரமாகிய மந்திரத்தைக் கொடுத்தபடியும்' என்று ஓரிடத்தில் உரை எழுதப்பெற்றிருந்தது. சமண நூலில் பஞ்சாட்சரமாகிய சைவ மந்திரத்திற்கு இடம் ஏது? என்று கலங்கினார். எனவே இத்தகைய மயக்கங்களிலிருந்து விடுபடுதற்காகச் சமண அறிஞர்களின் உதவியை நாடினார். சுந்திரநாத செட்டியார், சமுத்திர விஜயம் செட்டியாரைப் போன்ற சமணர்கள் நண்பர்கள் ஆயினர். பஞ்ச நமஸ்கார துதி

மந்திரமே பஞ்சாட்சர மந்திரம் என்று பிறழ உணர்ந்து எழுதப் பெற்றிருந்தது என்பது தெரிய வந்தது. அருகர், சித்தர், ஆசாரியர், சாதுக்கள், உபாத்தியாயர் எனும் ஐவரையும் பஞ்சபரமேட்டிகள் என்று கூறுதலும் அவர்களை வாழ்த்திப் பணியில் ஈடுபடுதல் சமணர்களின் மரபு என்பதும் தெரிய வந்தன.

டாக்டர் உ.வே.சா. அவர்களுக்கு நண்பர்களின் உதவியால் சமண சமயத்தில் புலமை பெறும் வாய்ப்பு அமைந்தது. ஆனால் பௌத்தத்தைப் பொறுத்தவரையில் அத்தகைய வாய்ப்பு அமைய வில்லை. எனவே அவர் நூல்களைச் சார வேண்டியவரானார், சிவஞான சித்தயாருக்கு வரையப் பெற்றிருந்த பரபக்க உரை, ஞானப்பிரகாசரின் உரை, வீரசோழியம், நீலகேசி ஆகியவற்றிலிருந்து ஓரளவு பௌத்தக் கருத்துக்களை அறிந்து கொண்டார். இலங் கையைச் சேர்ந்த வித்யோதய கலாசாலை முதல்வர் சுமங்களர் என்பவரும் உதவினார். மானியர் வில்லியம்ஸ், மாக்ஸ்முல்லர், ஓல்டன்பர்க், ரைஸ்டேவிஸ் ஆகியோரின் ஆங்கில நூல்கள் சிலவற்றை ரங்காசாரியர் எனும் நண்பர் படிக்க, அதனைக் கேட்டும் பௌத்தக் கருத்துக்களை அறிந்து கொண்டார். இவ்வாறு பல்லாற்றான் முயன்று பௌத்த சமயத்தில் சிறந்த புலமையாளர் எனும் தகுதியை ஐயரவர்கள் பெற்றார். மணிமேகலையைச் சிறப்பாகப் பதிப்பித்த பணியைப் பாராட்டி, 'பௌத்த சமயப் பிரபந்தப் பிரவர்த்தனாசாரியர்' எனும் பட்டம் வழங்கப்பெற்றது.

புறநானூற்றுப் பதிப்பு

புறநானூறு பழந்தமிழர் பண்பாடு, இலக்கிய மரபு போன்ற வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கியது. அதியமான், கரிகால் வளவுன் போன்ற மன்னர்களின் வீரம், கொடை, நாடுகளின் வளம் ஆகியவற்றை அறிந்து கொண்டாலன்றி, அந்நூலினைச் செம்மை யாகப் பதிப்பித்தல் இயலாது. எனவே உ.வே.சா. பழந்தமிழ் நாட்டைப் பற்றிய செய்திகளைச் சேகரிப்பதில் ஆர்வம் காட்டினார். வரலாற்று, கல்வெட்டு ஆராய்ச்சியில் வல்லவர்களாகிய இராவ் பகதூர் வெங்கையர், வி.கனகசபை பிள்ளை முதலியோரின் உதவியை நாடினார்.

புறநானூற்றை அச்சேற்றியபோது அனுபவித்த இன்னல்கள் குறித்து டாக்டர் உ.வே.சா. தமது 'என் சரித்திரத்தில்' விவரித்துள்ளார். அதில் சிறு பகுதி; "உரையில்லாத மூலங்கள் எழுத்துஞ் சொல்லும் மிகுந்தும் குறைத்தும் பிறழ்ந்தும் திரிந்தும் பலவாறு வேறுபட்டிருந்ததன்றி, இவற்றுள், சில பாடல்களின்பின், திணை எழுதப்படாமலும் சிலவற்றின்பின் துறை எழுதப்படாமலும் சில வற்றின்பின், இரண்டுமெழுதப்படாமலும சிலவற்றின்பின், இருவர் பெயரும் சிதைந்தும் சில பாடல்கள் இரண்டடித்தெழுதப் பட்டு இரண்டெண்களையேற்றும் வேறுவேறிடத்தில் இரண்டு பாடல்கள் ஒருங்கெழுதப்பட்டு ஓரெண்ணையேற்றும் சில முதற்பாகங் குறைந்தும் சில இடைப்பாகங் குறைந்தும் சில கடைப்பாகங் குறைந்தும் சில முற்றுமின்றியும் ஒரு பாடலின் அடிகளுள் ஒன்றும் பலவும் வேறு பாடல்களின் அடிகளோடு கலந்து ஒரடியே ஒரு பாட்டுட் சிலவிடத்து வரப்பெற்றும் பொருளுண்மை காணாத வண்ணம் இன்னும் பலவகைப்பட மாறியும் கையெழுத்துப் பிரதிகள் இருந்தன" (என் சரித்திரம், பக்.737-738).

பாடவேறுபாடுகள்

டாக்டர் உ.வே.சா. அவர்கள் ஒரு நூலைப் பதிப்பிக்கையில் அந்நூலாசிரியர் அல்லது பாடலாசிரியரின் உண்மையான பாடலின் வடிவத்தையும் வெளிப்படுத்த வேண்டும் எனும் நோக்கத்தில் உறுதியாக இருந்தார். பதிப்பாசிரியர் அல்லது ஏடு பெயர்த்து எழுதுவோர் தமது உள்ளக் கிளர்ச்சி, சமயம், இனம் சார்ந்த விருப்பு வெறுப்பிற்கு ஆளாதல் தகாது என்பது அவரது கொள்கை. இதனாலேயே அவர் ஒரு நூலைப் பதிப்பித்து அச்சேற்றுதற்குக் கிடைத்தற்கு வாய்ப்புள்ள இடங்களை எல்லாம், அறிஞர்களை - சான்றோர்களை எல்லாம் நாடிச் சென்று ஒன்றுக்கு மேற்பட்ட சுவடிகளை ஆவலுடன் தொகுத்தார். சுவடிகள் பலவானபோது அவற்றில் காணப்பட்ட பாடவேறுபாடுகளைக் கூர்ந்து கவனித்தார். பாடலாசிரியரின் காலச்சூழல், அவர்தம் வாழ்க்கைச் சூழலைக் கருத்திற்கொண்டு, எந்தப் பாடம் பொருட் சிறப்பும் அறிவார்ந்தது மானதோ, அதனை உறுதி செய்து கொண்டார். தாம் உறுதி செய்து கொண்ட பாடத்தைப் பாடலில் அமைத்துக் கொண்டதோடு, பிற

பாட வேறுபாடுகளை அடிக்குறிப்பிலும் பதிவு செய்தார்.

டாக்டர் உ.வே. சாமிநாதையர் ஒரு பாடலுக்கு வெவ்வேறு பாடவேறுபாடுகள் காணப்படும்போது, தமது கொள்கை, சமயம், இனம் எனும் எவ்வித விருப்பிற்கோ வெறுப்பிற்கோ ஆட்படாமல், சமூகப் பண்பாடு, இலக்கிய மரபு ஆகியவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து, ஏற்புடைய பாடத்தை மூலபாடமாகத் தெரிவு செய்துள்ளார்; ஏனைய பாடங்களை அடிக்குறிப்பில் சுட்டிக்காட்டியுள்ளார்.

"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி இல்லென
அறம்பா டிற்றே யாயிழை கணவ"

எனும் ஆலத்தூர் கிழாரின் புறப்பாடலில், 'பார்ப்பார்த் தப்பிய' எனும் தொடரில் 'பார்ப்பார்' எனும் சீருக்குப் பதிலியாகக் 'குரவர்' எனும் பாடமும் உளது என்றும், சாமிநாதையர் தம் இனத்தைச் சார்ந்து 'பார்ப்பார்' என்று திருத்தி அமைத்துள்ளார் என்றும் ஒரு பழி டாக்டர் உ.வே.சா. மீது சுமத்தப்பெற்றுள்ளது. 'பார்ப்பார்' என்ற சொல்லை விடவும் 'குரவர்' என்ற சொல்லே மோனை நயமுடையது என்பது பழியுரைப்போரின் அமைதி. இந்தப் பாடலில் பழி உரைப்போர் பற்றியுள்ள பொழிப்பு மோனை முதலடியில் மட்டுமே காணப்படுகிறது. ஏனைய அடிகளில் இல்லை. தவிர, சங்கப் பாடல்களில் பிற்காலத்தில் இடம்பெற்றுள்ளதைப் போன்ற மோனையும் எதுகையும் சீராக ஏற்கப்பெறவில்லை. புலவர்கள் இத்தகைய யாப்பு விதிகளுக்கு முன்னுரிமை தரவும் இல்லை.

புறநானூற்றில் உள்ள இந்தப் பாடலுக்கு இணையான கருத்துடைய சுலோகம் ஒன்று வால்மீகி இராமாயணத்திலும் இடம் பெற்றுள்ளது. 'பார்ப்பனனைக் கொல்லுதல், மது அருந்துதல், களவு ஆகிய குற்றங்களைச் செய்தவனுக்குப் பிராயச்சித்தம்

உண்டு. ஆனால் நன்றியைக் கொன்றவனுக்குப் பிராயச்சித்தம் இல்லை' (கிட்கிந்தா காண்டம், சருக்கம் 34, சுலோகம் 31-34). வாலியைக் கொன்ற பின்னர் இராமனுக்கு உதவுகிற கடமையை மறந்து சிற்றின்பத்தில் மூழ்கிக் கிடந்த சுக்கிரீவனை இலக்குவன் எச்சரிப்பதாக இச்செய்தி இடம்பெற்றுள்ளது.

தமிழிலக்கியங்களில் பசுவையும் பார்ப்பனனையும் ஒரு சேர மதித்து விவரிக்கிற மரபு காலந்தோறும் காணப்படுகிறது.

"ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம்மம்பு கடிவிடுதும் நும்மரண் சேர்மினென
அறத்தாறு நுவலும் பூட்கை"(நெட்டிமையார், புறநானூறு 9)

"ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
காவலன் காலான் எனின்" (திருக்குறள் 560)

"பார்ப்பார் அறவோர் பசுப்பத்தினிப் பெண்டிர்
மூத்தோர் குழவி எனுமிவரைக் கைவிட்டுத்
தீத்திறத்தார் பக்கமே சேர்கஎன்று காய்த்திய
பொற்கொடி ஏவப் புகையழல் மண்டிற்றே
நற்றேரான் கூடல் நகர்"
(சிலப்பதிகாரம், வஞ்சின மாலை, 53–57)

"பார்ப்பார் தவரே சுமந்தார் பிணிப்பட்டார்
மூத்தோர் இளையார் பசுப்பெண்டிர்"
(ஆசாரக் கோவை 65)

பண்டைய பாரதத்தில் பார்ப்பனர், பசு முதலியோர் மென்மை யான சால்புடையோர் எனக் கருதப்பட்டு போற்றப்பெற்றனர். இந்தப் பண்பாட்டு மரபு இலக்கியங்களில் பாடுபொருளாகக் கொண்டாடப்பெற்றன. எனவே, டாக்டர் உ.வே.சா. அவர்களின் கருத்து 'ஆன்முலை...' பாடற்கு ஏற்புடையதே.

டாக்டர் உ.வே.சா. அறிவார்ந்த கருத்துச் சிறப்புடைய பாடத்தை ஏற்று நூல்களைப் பதிப்பித்தார்.

"கருங்கால் வேம்பின் ஒண்பூ யாணர்
என்னை இன்றியும் கழிவது கொல்லோ
ஆற்றயல் எழுந்த மென்கோட் டதவத்
தெழுகுளிறு மிதித்த ஒருபழம் போலக்
குழையக் கொடியோர் நாவே
காதல ரகலக் கல்லென் றவ்வே"

(பரணர்,குறுந்தொகை 24)

காதலனைப் பிரிந்து தனிமையில் வாழ்கிற தலைவியைக் குறித்து, அயலார் கூறுகிற பழிச் சொற்களால் மனம் நைந்து போன தலைவியின் நிலையைப் புலவர் இவ்வாறு விவரிக்கிறார். இப் பாடலில் 'குளிறு' என்ற சொல்லுக்குப் பதிலியாகக் 'களிறு' எனும் பாட வேறுபாட்டினையும் அடிக்குறிப்பில் ஐயரவர்கள் தந்துள்ளார்.

ஓர் அத்திப் பழத்தை ஏழு குளிறுகள் (நண்டுகள்) மிதித்து நசுக்கியத்தைப் போன்றது தலைவியின் வேதனை என்பது உ.வே.சா.வின் பாடம். களிறு என்றால் பொருட்சிறப்பு அமையாது. அத்திப்பழத்தை ஒரு களிறு மிதித்தாலே பழம் சிதைந்து களிற்றின் காலில் ஒட்டிக்கொள்ளும். இருக்கிற இடம் தெரியாமல் போய்விடும். அவ்வாறாயின் ஏழு களிறு மிதித்தல் எவ்வாறு வாய்க்கும்? அயலிலுள்ள மகளிர் ஒருவர் பின் மற்றொருவராகி மாறிமாறித் தூற்றிக் கொண்டிருக்கின்றனர். இதனால் உயிர்போகாது, மன வேதனையால் செத்துப் பிழைத்து அல்லலுறுகிறாள் தலைவி. ஓர் அத்திப் பழத்தை ஒன்றன்பின் ஒன்றாக ஏழு நண்டுகளால் காலால் இடறிச் சிதைப்பதைப் போன்று அயலார் தனது தலைவியைத் தூற்றுகிற செயல் என்பது பொருட் சிறப்பும் அறிவும் ஆர்ந்த பாடமாகும்.

கவிமணி போற்றிய தமிழ்மணி

டாக்டர் உ.வே.சா. அவர்கள் பெருஞ்செல்வந்தர் அல்லர். ஏழைத் தமிழாசான். நூல்களை அச்சேற்றுதற்காகப் பலரிடமும் கடன்பட்டார். சேதுபதி மன்னர் அளித்த அரிய பரிசுப்பொருளையும்

விலைபேச நேரிட்டது. அவர் நூல்களைப் பதிப்பித்துக்கொண்டிருந்த போது, அவருக்குச் சுவடிகளை உதவி, அறிவுரை வழங்கி, அச்சேற்றுதற்கான பொருளையும் கொடுத்து உதவிய அன்பர்கள் பலர் இவ்வுலகினின்றும் மறைந்தனர். இன்னோரன்ன பல்வேறு இன்னல்களையும் சிக்கல்களையும் அனுபவித்துப் பழந்தமிழ் நூற்செல்வங்கள் சிதையாவாறு காப்பாற்றினார். அருந்தமிழ்த் தாய் அனைத்துலகும் கொண்டாடும் வண்ணம் செம்மொழியாய்ச் செம்மாந்திருக்கச் செய்தார்.

"கண்ணும் சடையாமல் கையும் தளராமல்
உண்ணப் பசியெழுவ தோராமல் – எண்ணியெண்ணிச்
செந்தமிழ்த் தாய்க்குச் செய்த திருத்தொண்டுக்
கிந்நிலத் துண்டோ இணை"

என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை போற்றும் வண்ணம் டாக்டர் உ.வே.சா. தமிழ்மணியாகத் திகழ்கிறார்.

பண்பாட்டு நோக்கில் சங்க இலக்கியம்

முனைவர் மா.செல்வத்தரசி
உதவிப்பேராசிரியர்
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

முன்னுரை

சங்க இலக்கியம் மக்களின் பல்வேறு வாழ்வியல் கூறுகளை உள்ளடக்கியது. அவற்றுள் ஒன்று பண்பாடு. பண்பாடு என்பது பல வகையினைக் கொண்டதாக உள்ளது. அவற்றுள் தமிழர்களால் முதன்மையாக முழுமையான மரபாகப் பின்பற்றப்பட்டு வருவது விருந்தோம்பல் ஆகும். இத்தகைய விருந்தோம்பல் சங்க இலக்கியம் முழுவதும் இளையோடிக் காணப்படுகிறது. ஆயினும் மன்னனும் மக்களும் விரும்பி விருந்தோம்பலைப் போற்றிய இலக்கியம் ஆற்றுப்படை இலக்கியம் ஆகும். இவ் இலக்கியத்தில் எத்தகைய விருந்தோம்பல் நடைபெற்றது என்பதனை எடுத்தியம்பும் முகமாக இக்கட்டுரை அமைகிறது.

பண்பாடு

பண்பாடு பல பொருட்கு உரியதேனும் நிலமும், மக்கள் உள்ளமும் பற்றியே பெருவழக்காகப் பேசப்படுகிறது. ஆங்கிலத்தில் Culture என்னும் பெயர்ச் சொல் சிறப்பாக நிலப் பண்பாட்டையும் உளப்பண்பாட்டையும் குறிக்கின்றது.

பண்பாடு, அறிவு, நம்பிக்கை, கலை, ஒழுக்க நெறிகள், சட்டங்கள், வழக்கம், முதலானவையும், மனிதன் சமுதாயத்தில் ஓர் உறுப்பினராக இருந்து கற்கும் பிற திறமைகளும், பழக்கங்களும் அடங்கிய' முழுமைத் தொகுதியாகும் என்கிறார் மானுடவியலார்.

தமிழராகிய நம் பண்பாடு மரபாகத் தொன்மை தொட்டுப் பேணி வரப்படுகிறது. பொருளாதாரத்தில் உயர்ந்தவராலும் தாழ்ந்த வராலும் பண்பாடு போற்றப்பட்டு வருகிறது. பக்தவத்சல பாரதி, "பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டு கிறது. மனிதன் மட்டுமே பண்பாட்டைக் கொண்ட விலங்காவான்" என்கிறார்.

குறியீட்டு நோக்கில் பண்பாடு

குறியீடு என்பதும் பண்பாடு போல் இவைதான் என்று வரையறுத்துக் கூற இயலாது. பண்பாட்டின் பெரும்பாலான நடத்தை முறைகள் குறியீடுகளின் வாயிலாக வெளிப்படுகின்றன. மானிடவியலார் சிலர் பண்பாட்டின் ஒட்டுமொத்த தொகுப்பு குறியீடு களால் ஆக்கப்பெற்றது என்பர்.

குறியீடுகளுள் ஒன்றான விருந்தோம்பலே மக்களின் பண்பாட்டை வெளிப்படுத்துகின்றது.

விருந்தோம்பல் பண்பு

விருந்து என்பதற்கு 'புதுமை' என்பது பொருளாகும். நேற்று வந்தவர் இன்று வந்தவர் என்ற எண்ணம் இல்லாது தம்மை நாடி வருபவர் எவராயினும் உபசரித்து விருந்து அளித்திருக்கின்றனர். இல்வாழ்க்கை வாழ்பவரின் கடமைகளில் ஒன்றாக விருந்தோம்பல் இருந்திருக்கிறது. வள்ளுவரும் விருந்தோம்பல் என்பதற்குத் தனி அதிகாரத்தை வகுத்துள்ளார்.

"வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இல்" (குறள்: 83)

நாள்தோறும் தன்னை நாடிவரும் விருந்தினரைப் போற்றுபவனுக்கு இல்வாழ்வில் துன்பம் வராது என்றும்,

"அகனமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்" (குறள் : 84)

முகமலர்ச்சியோடு விருந்தினரைப் பேணுபவனுடைய வீட்டில் திருமகள் அகலாது தங்குவாள் என்றும்,

"வித்தும் இடல் வேண்டும் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்" (குறள் : 85)

வந்த விருந்தினரைப் போற்றி, வரும் விருந்தினரை எதிர் பார்த்திருப்பவனுடைய நிலத்தில் விதை விதைக்க வேண்டிய தில்லை என்றும் விருந்தின் சிறப்பு கூறப்படுகிறது.

பெண்களுக்குரிய பண்புகளில் ஒன்றாக விருந்து அறியப் படுகிறது. விருந்து உபசரிப்பின் மூலம் அகமகிழ்வு கொண்டிருக் கின்றனர். விருந்தால் இல்லத்தில் தலைவன் தலைவியரின் ஊடல்

தீர்க்கப்பட்டிருக்கிறது. பிரிந்து சென்ற தலைவன் நினைவை மறப்பதற்கும், தலைவன் விரைவில் திரும்பி வருவதற்கும் விருந்து படைப்பதில் ஆர்வம் காட்டியிருக்கின்றனர்.

தமிழர்களின் விருந்தோம்பலை ஊன்முறை விருந்து கோன்முறை விருந்து என்று குறிப்பிடுகின்றனர். ஊன்முறை விருந்து மன்னனும் குடிமக்களும் செய்யும் விருந்தாகும். இவ் விருந்து உறவினர், நண்பர், உடன்போக்கு மேற்கொண்ட தலை மக்கள், பொருளீட்டச் செல்லும் தலைவன், வழிப்போக்கர்கள், புலவர், கலைஞர் ஆகிய அறிமுகமான அறிமுகமற்றவர்களுக்கு குடிமக்களால் வழங்கப்பட்டு வந்திருக்கிறது. கோன்முறை விருந்தினை வள்ளல்கள் செய்து வந்திருக்கின்றனர். தம்மை நாடி வந்தவர்களைப் பாராட்டி இவ்விருந்தும் செய்யப்பட்டு வந்திருக்கிறது.

விருந்து என்பது ஏற்பதில் சங்ககாலம் தொட்டு இன்று வரையிலும் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகிறது. அத்தகைய விருந்தோம்பல் ஆற்றுப்படை நூல்களாகிய பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை மலைபடுகடாம் என்னும் கூத்தராற்றுப்படை ஆகியவற்றில் விருந்தோம்பல் பண்பு எவ்வாறு நடைபெற்றது என்பது விளக்கப்படுகிறது.

பொருநராற்றுப்படையில் விருந்தோம்பல் பண்பு

பாடியவர் முடத்தாமக்கண்ணியார், பாட்டுடைத் தலைவன் சோழன் கரிகாற் பெருவளத்தான். இவன் இளஞ்சேட் சென்னி என்னும் அரசனின் மகனாவான். இவன் கருவில் இருக்கும் போதே இவனுடைய தந்தை இறந்துபட்டான். ஆகையால் தாய்வயிற்றில் இருக்கும்போதே அரசேற்றவன். கரிகாலன் இளமையிலேயே போர்புரிந்து வெண்ணிக்களத்தை வென்றான். அத்தகைய அவனைப் பகைவர்கள் வஞ்சகமாகச் சிறையிலிட்டுத் தீக்கொளுத்தினர். தப்பமுயன்ற போது தீயால் கால் கரிந்து போனது. அதன் பிறகே கரிகாலன் எனப்பட்டான். இவனது இயற்பெயர் திருமாவளவன் என்பதாகும். இவனுக்கு ஆதிமந்தி என்றொரு மகள் இருந்ததாகச் சிலம்பு கூறுகிறது. உறையூரைத் திருத்தினான். காடுகளைத் திருத்தி நாடாக்கி குடிமக்களைப் பேணினான். இவனது நாட்டில் விருந்தோம்பல் எவ்வாறு இருந்தது என்பதும் இங்கு எடுத்துரைக்கப்படுகிறது.

கரிகாற் பெருவளத்தானின் விருந்தோம்பல் என்பது, மேல்மாடத்தில் வாழ்பவர்களும் இழையினை அணிந்து இருப்பவர்களும் அழகிய கூந்தலை உடையவர்களும் இனிமையான புன்னகை புரியும் பணிப் பெண்களும் பொன்னால் செய்த வட்டு நிறையுமாறு கள்ளினைப் பலமுறை ஊற்றிக் கொடுத்து வழிநடைப் பாதையில் நடந்து வந்த களைப்பை நீக்கியிருக்கின்றனர். இதற்கு முன் கள் உண்டதில்லையே என்ற வருத்தம் நீங்கும் அளவிற்குக் கொடுத்துள்ளான்.

"ஆர வுண்டு பேரஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை.." (பத்து.பா.வரி. 88-89)

அரண்மனையிலேயே உறங்குவதற்கு இடமும் கொடுத்திருக்கின்றான். 'மட்டு' என்ற சொல் 'மது' எனப்பட்டது. அது மகிழ்வைத் தந்திருக்கிறது. இத்தகைய கள்ளானது, தென்னங்கள், பனங்கள், ஈச்சங்கள், அத்திக்கள், அரிசிக்கள், வேலங்கள் எனப் பல்வேறு கள்வகைகள் தயாரிக்கப்பட்டிருக்கிறது. மேலும் "முடியுடை மன்னரும் குறுநிலத் தலைவர்களும் புலவர்களும் போர்வீரர்களும் குறவரும் பாணரும் ஆண்களும் பெண்களும் செல்வரும் வறியவரும் மதுவுண்டு களித்தனர்" என்கிறார் நா.இராமச்சந்திரன் என்பார்.

கரிகாலன் உணவு உண்ணுவதற்கான காலத்தை அறிந்து அழைத்திருக்கிறான். அறுகம்புல் தின்று வளர்ந்த செம்மறியாட்டின் வெந்த தொடைக் கறியும் இரும்புக் கம்பியில் கோர்த்துச் சுடப்பட்ட இறைச்சித் தசைகளையும் உண்ணக் கொடுத்திருக்கிறான். அரிசிச் சோற்றுடன் பொரிக்கப்பட்ட காய்கறிகளையும் கழுத்துவரை நிரம்பும் படி அருகிலேயே இருந்து உண்ணச் செய்திருக்கிறான். இவ்வாறு உண்டதால் அவர்களது பற்கள் மழுங்கிப் போயிருக்கின்றன.

கரிகாலனின் இத்தகைய உபசரிப்பு அவன் விருந்தோம்பலில் சிறந்தவன் என்பதை அறிவிக்கிறது. விருந்து செய்து மகிழ்வோடு இருந்த அவன் போரில் சிறந்த வெற்றியைப் பெற்றிருக்கிறான் என்பதும் தெரிகிறது.

சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பல் பண்பு

பாடியவர் இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார். பாட்டுடைத் தலைவன் ஓய்மானாட்டு நல்லியக்கோடன் ஆவான். இவ்வள்ளல்

திண்டிவனத்தைச் சார்ந்தவனாவான். பேகன் முதலிய ஏழு வள்ளல்களுக்கும் இவன் ஒருவனே சமமாவான். இவரை நந்தத்தனார் நன்னாகனார் போன்றோர் புகழ்ந்து போற்றியுள்ளனர். 'மாவிலங்கை' என்ற நகரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சிசெய்தான். 'ஓவியர்குடி' என்னும் சிறந்த அரசர் குடியில் தோன்றியவன். அவன் நாட்டில் கிடங்கில், எயிற்பட்டினம், வேலூர், ஆமூர் என்பன சிறந்து விளங்கின. கிடங்கில் என்ற இடத்தில் இடிந்த அரண்மனைகளும் அகழிகளும் இன்றும் காணப்படுகின்றன.

நல்லியக்கோடன் தன் பகைவர்களின் மிகுதிகண்டு அஞ்சி செந்தமிழ்க் கடவுளாகிய முருகனை வழிபட்டான். அக்கடவுள் இவ்வூரில் உள்ள ஒரு கேணியில் பூத்த பூவைப் பறித்து நின்பகைவர் மேல் விடுக எனக் கூறினார். அதுவே வேலாகிச் சென்று பகைவரை அழித்ததென்றும் அதனால் அதற்கு வேலூர் என்ற பெயரும் ஏற்பட்டது என்பதும் செவிவழிச் செய்தி. நல்லியக்கோடன் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழையும் பயின்ற புலவர்கட்குத் தாயாகி அவரையும் அவர்தம் கலைகளையும் நன்கு போற்றினான். அவனது நாட்டில் விருந்தோம்பல் பண்பு எவ்வாறு இருந்தது என்பதும் அறியவருகிறது.

> "...............நுளைமகள் அரித்த
> பழம்படும் தேறல் பரதவர் மடுப்பக்
> கிளை மலர்ப் படப்பைக் கிடங்கிற் கோமான்
> தளையவிழ் தெரியல் தகையோற் பாடி"

(பத்து.பா.வரி.58-61)

நல்லியக்கோடனின் நாட்டிலுள்ள நுளையர் மகள் காய்ச்சி வடிகட்டிய தேறல் என்ற கள்ளினைப் பரதவர்கள் வழங்கியுள்ளனர். கள்ளானது மட்டு, மது, நறவு, தேறல், மகிழ் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. த.இராஜேந்திரன், "பழங்காலத்தில் கள் குறித்தே அதிகம் பேசப்பட்டுள்ளது. போரில் வெற்றி பெற்றதன் வெற்றிவிழாக் கொண்டாட்டங்கள் அனைவரும் ஒன்று கூடும் பெரும் திருவிழாக் காலங்களில் கள்ளுண்ட வெறி தலைக்கேற விடிய விடிய ஆடிய காட்சிகளைக் குறிப்பிட்டுள்ளார்."

வேலூரில் எயினர்கள் வருத்தம் நீங்கக் குடிசையில் வாழும் எயினர்களின் குலத்தில் பிறந்த பெண்கள் புளிக்கறி இட்ட

சோற்றினை இறைச்சியுடன் பசி நீங்கும் அளவிற்கு உண்ணக் கொடுத்துள்ளனர்.

ஆமூரில் எருதுகளை உடைய உழவர் குடியில் உள்ள பெண்கள் யானையின் தும்பிக்கை போன்ற சடையினையும் வளை யணிந்த கையினையும் உடையவர்கள். அவர்கள் அரிசிச் சோற்றினை நண்டின் கலவையுடன் உண்ணக் கொடுத்துள்ளனர்.

நல்லிக்கோடனின் விருந்து அவன் நாட்டு மக்களின் விருந் தோம்பலை அடுத்தே இடம் பெறுகிறது. மூங்கிலின் உள்ளே உள்ள பட்டையை உரித்தது போன்ற மென்மையாக உள்ள உடை யினை உடுத்திக் கொள்ளச் செய்துள்ளான். பாம்பின் நஞ்சால் ஏறிய மயக்கத்தினைப் போல் மயக்கம் தரும் கள்ளினைக் குடிக்கக் கொடுத்திருக்கிறான். ஞா.ஸ்டீபன் அவர்கள் "மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுதல், கடினமான வேலைகளைச் செய்தல், போன்ற சூழல்களில் மது பயன்படுத்தப்படுவது இயல்பு" என்கிறார். *வீமன் எழுதிய சமையல் நூல் முறை களில் இருந்து சிறிதும் தவறு* நிகழாதவாறு சமைக்கப்பட்ட உணவினை வழங்கியிருக்கிறான். உண்ணும் சுவை அறிந்து உணவினை சூரியனின் ஒளியைத் தோற்கும் பொன்னால் செய்யப்பட்ட உணவு உண்ணும் பாத்திரத்தில் தானே அருகில் நின்று உண்ணச் செய்திருக்கிறான்.

நல்லியக்கோடனின் நாட்டில் நுளையர், எயினர், உழவர் போன்ற குடிமக்கள் விருந்தோம்பலைச் செய்திருக்கின்றனர். கள் மயக்கம் தரும் அளவிற்கு வழங்கப்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் மதிமயக்கம் இல்லையெனில் இரவலர்கள் வள்ளல் களைப் பொய்யாகப் புகழக்கூடும். ஆனால் மயக்க நிலையில் புகழ்ந்து பாடியுள்ளனர்; மன்னனின் மட்டற்ற சிறப்புகள் பேசப்படு கிறது. விருந்தோம்பலை சமையல் கலை வல்லுனர்கள் கூறிய விதத்தில் கொடுத்துள்ளான். இதில் இருந்து நல்லியக் கோடனின் விருந்தோம்பலும் அவன் நாட்டு மக்களின் விருந் தோம்பலும் எத்தகைய சிறப்புடையது என்று அறியப்படுகிறது.

பெரும்பாணாற்றுப்படையில் விருந்தோம்பல் பண்பு

பாடியவர் கடியலூர் உருத்திரங்கண்ணனார், பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன். *காஞ்சிபுரத்தைத்* தலைநகராகக் கொண்ட தொண்டை நாட்டை ஆண்ட மன்னர்கள்

தொண்டைமான் என்று சொல்லப்பட்டனர். தொண்டையர் என்னும் மரபினர் ஆண்டதால் தொண்டை நாடு எனப்பட்டது.

நாகப்பட்டினத்துச் சோழன் நாகலோகத்தே சென்று நாககன்னியைப் புணர்ந்த காலத்து அவள் யான் பெற்ற புதல்வனை என்செய்வேன் என்றாள். தொண்டையை அடையாள மாகக் காட்டி கடலிலே விடு அவன் வந்து கரையேறுவான் என்றான். அவனுக்கு நான் அரசுரிமையைக் கொடுக்கிறேன் என்று கூறி யுள்ளான். அவளும் அவ்வாறே செய்ய திரையில் அடித்து வரப்பட்டான். ஆகையால் திரையன் என்று பெயர் பெற்றதாகக் கூறுகின்றனர். இவனைத் திருவேங்கடம் உடையான் என்றும், இவனை நயந்தோர் நாடு பொன்பூத்தன என்றும் பகைத்தோர் மன்றம் பாழ்பட்டன என்பதும் அறியலாகிறது. அவனது நாட்டில் விருந்தோம்பல் எவ்வாறு இருந்தது என்பது விளக்கப்படுகிறது.

இளந்திரையனின் நாட்டில் எயிற்றியர் வறுமை நிலையில் எத்தகைய விருந்தினைச் செய்துள்ளனர் என்பதனை,

"........................நெடுங்கிணற்று
வல்லூற் றுவரி தோண்டித் தொல்லை
முரவுவாய்க் குழிசி முரியடுப் பேற்றி"

(பத்து, பா.வரி. 97-99)

இவர்கள் புல்லரிசியினை உரலில் இட்டு வயிரம் பாய்ந்த உலக்கையால் குத்தி எடுத்தனர். ஆழமான கிணற்றில் கொஞ்ச மாக ஊறுகின்ற உப்பு நீர். அதை எடுத்து வந்து வாய் உடைந்த பழைய பானையில் ஊற்றினர். அதை உடைந்த அடுப்பில் வைத்த அரிசியைக் கழுவாமல் இட்டு சமைத்தனர்.

அச் சோற்றினைக் கருவாட்டுடன் கொடுத்துள்ளனர். அவர்களிடம் தொண்டைமான் இளந்திரையன்,

"தெய்வ மடையில் தேக்கிலைக் குவைஇநும்
பைதீர் கடும்பொடு பதமிகப் பெறுகுவிர்" என,

(பத்து, பா.வரி. 104-105)

தெய்வத்திற்குப் பலி கொடுப்பதுபோல் தேக்கு இலையில் உணவை இட்டு பசியால் வாடிய சுற்றத்தோடு உண்ணும் அளவிற்கு விருந்தோம்பலைச் செய்திருக்கின்றனர்.

தொடர்ச்சி அடுத்த இதழில்

செந்தமிழ்க் கல்லூரிக்குழு உறுப்பினர்கள்

திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்	தலைவர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,	செயலாளர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,	உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. ச.தசரதராமன் B.A.,B.L.,	உறுப்பினர்
திரு. து.மாயராசன் B.Sc., B.L.,	உறுப்பினர்
திரு. இரா.ஜெகனாதன் B.E.,	உறுப்பினர்
திரு. லெ.சிவக்குமார் B.E.,	உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc.,	உறுப்பினர்
திரு. கி.ராஜாராம் B.A.,	உறுப்பினர்
முனைவர் அ.செல்வமணி	பல்கலைக்கழக நியமன உறுப்பினர்
முனைவர் சு.விஜயன்	உறுப்பினர்
முனைவர் கி.வேணுகா	உறுப்பினர்

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

முனைவர் திரு. **தமிழண்ணல்**

பெரும்புலவர் திரு. **இரா. இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ. மணவாளன்**

முனைவர் திரு. **கதிர்மகாதேவன்**

முனைவர் திரு. **முருகரத்தனம்**

முனைவர் திரு. **பெ. சுயம்பு**

முனைவர் திரு. **இ. மறைமலை**

RNI Regd. No.5508/57 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ்க் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 © 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- ♦ இளம் இலக்கியம் ♦ இளங்கலை ♦ முதுகலை
- ♦ இளம்நிலை ஆய்வாளர் ♦ முதுநிலை ஆய்வாளர்
- ♦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் - சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
மதுரை - 625 001

From
SECRETARY
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, INDIA

பெறுநர்/To,

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை - 1 © 0452 - 2343455
அச்சகம்: **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்**, காமராஜர்சாலை, மதுரை-9.